**இந்திய அரசு**

**சட்டம் மற்றும் நீதி அமைச்சகம்**

सत्यमेव जयते

# 2013 ஆம் ஆண்டு தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம்

(எண் 20/2013)

**(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)**

# THE NATIONAL FOOD SECURITY ACT, 2013

**(No. 20 of 2013)**

**(As on 31st October, 2023)**


தமிழாக்கம்

இந்திய அரசுக்காக

தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்

சென்னை

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது

2023

# 2013 ஆம் ஆண்டு தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம்

(எண் 20/2013)

# THE NATIONAL FOOD SECURITY ACT, 2013

**(No. 20 of 2013)**

# PREFACE

This edition of the National Food Security Act, 2013 (No. 20 of 2013) as on 31st October, 2023, containing the Authoritative Texts of that Act in Tamil and the same was published in the Gazette of the India, Extraordinary, Part XV, section 1, Vol. I dated 13th March, 2021 on Pages from 271 to 302.

The Authoritative Texts in Tamil was published under the authority of the President under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973) and on such publication, it become the authoritative texts of the Act in Tamil.

New Delhi, *(Signed)……*
13th March, 2021. *Secretary to Government of India.*

# முன்னுரை

2021, அக்டோபர் 31 அன்று இருந்தவாறுள்ள 2013 ஆம் ஆண்டு தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் (எண் 20/2013) இன் இந்தப் பதிப்பு அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான தமிழ் வாசகத்தைக் கொண்டுள்ளது. இது 2021, மார்ச் 13 ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ், பகுதி XV, பிரிவு 1, தொகுதி I இன் 271 முதல் 302 வரையிலான பக்கங்களில் வெளியிடப்பட்டது.

இந்த அதிகாரவுரிமைப்படியான வாசகமாகிய தமிழ் மொழிப்பெயர்ப்பு, அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 இன் (50/1973) பிரிவு 2 இன் கூறு (அ) வின்படி குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது, அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான வாசகம் ஆயிற்று.

புது தில்லி, (ஒப்பம்)......
13, மார்ச் 2021. இந்திய அரசுச் செயலாளர்.

# THE NATIONAL FOOD SECURITY ACT, 2013

**(No. 20 of 2013)**

## ARRNGEMENT OF SECTIONS

## CHAPTER I

## PRELIMINARY


| SECTIONS | | Page No. |
|---|---|---|
| 1. | Short title, extent and commencement. | 1 |
| 2. | Definitions. | 1 |


## CHAPTER II

## PROVISIONS FOR FOOD SECURITY


| | | |
|---|---|---|
| 3. | Right to receive foodgrains at subsidised prices by persons belonging to eligible households under Targeted Public Distribution System. | 4 |
| 4. | Nutritional support to pregnant women and lactating mothers. | 5 |
| 5. | Nutritional support to children. | 6 |
| 6. | Prevention and management of child malnutrition. | 6 |
| 7. | Implementation of schemes for realisation of entitlements. | 6 |


## CHAPTER III

## FOOD SECURITY ALLOWANCE


| | | |
|---|---|---|
| 8. | Right to receive food security allowance in certain cases. | 7 |


## CHAPTER IV

## IDENTIFICATION OF ELIGIBLE HOUSEHOLDS


| | | |
|---|---|---|
| 9. | Coverage of population under Targeted Public Distribution System. | 7 |
| 10. | State Government to prepare guidelines and to identify priority households. | 7 |
| 11. | Publication and display of list of eligible households. | 8 |

# 2013 ஆம் ஆண்டு தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம்

(எண் 20/2013)

## பொருளடக்கம்

### அத்தியாயம் I

### முன்னுரை

பிரிவுகள் பக்கம்

1. குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம். 1

2. பொருள் வரையறைகள். 1

### அத்தியாயம் II

### உணவு பாதுகாப்பிற்கான வகையங்கள்

3. இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டத்தின்படி தகுமையுடைய குடும்பத்தினரைச் சார்ந்தவர்கள் மானியவிலைகளில் உணவு தானியங்களைப் பெறுவதற்கான உரிமை. 4

4. கருவுற்றுள்ள பெண்களுக்கும் பால் கொடுக்கும் தாய்களுக்குமான சத்துணவு உதவி. 5

5. சிறார்களுக்கு சத்துணவு உதவி. 6

6. சிறார்களுக்கு சத்துக்குறைந்த உணவு அளிப்பதைத் தடுத்தலும் மற்றும் மேலாண்மை செய்தலும். 6

7. உரிமைகொண்ட பயன்களுக்கு செயல்வடிவம் கொடுக்கும் திட்டங்களை செயல்படுத்துதல். 6

### அத்தியாயம் III

### உணவு பாதுகாப்புப் படித்தொகைகள்

8. குறித்த சில நேர்வுகளில் உணவு பாதுகாப்புப் படித் தொகைகளைப் பெறுவதற்கான உரிமை. 7

### அத்தியாயம் IV

### தகுமையுடைய குடும்பத்தினரைக் கண்டறிதல்

9. இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொதுப் பங்கீட்டு முறையின் கீழ் மக்கள்தொகை உள்ளடக்க அளவு. 7

10. மாநில அரசு, வழிகாட்டு நெறிகளைத் தயாரித்தல் மற்றும் முன்னுரிமை குடும்பத்தினரைக் கண்டறிதல். 7

11. தகுமையுடைய குடும்பத்தினர் பட்டியலை வெளியிடுதலும் காட்சிக்கு வைத்தலும். 8

## CHAPTER V

## REFORMS IN TARGETED PUBLIC DISTRIBUTION SYSTEM


12. Reforms in Targeted Public Distribution System. 8


## CHAPTER VI

## WOMEN EMPOWERMENT


13. Women of eighteen years of age or above to be head of household for purpose of issue of ration cards. 9


## CHAPTER VII

## GRIEVANCE REDRESSAL MECHANISM


14. Internal grievance redressal mechanism. 9

15. District Grievance Redressal Officer. 10

16. State Food Commission. 10

17. Salary and allowances of Chairperson, Member, Member-Secretary and other staff of State Commission. 13

18. Designation of any Commission or body to function as State Commission. 13

19. Joint State Food Commission. 13

20. Powers relating to inquiries. 13

21. Vacancies, etc., not to invalidate proceedings of State Commission. 14


## CHAPTER VIII

## OBLIGATIONS OF CENTRAL GOVERNMENT FOR FOOD SECURITY


22. Central Government to allocate required quantity of foodgrains from central pool to State Governments. 14

23. Provisions for funds by Central Government to State Government in certain cases. 15

## அத்தியாயம் V

## இலக்குநிர்ணயிக்கப்பட்ட பொதுப் பங்கீட்டு முறையில் சீர்திருத்தங்கள்


12. இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொதுப் பங்கீட்டு முறையில் சீர்திருத்தங்கள். 8


## அத்தியாயம் VI

## மகளிர் அதிகாரமளிக்கப்பெறுதல்


13. பங்கீடு அட்டைகள் வழங்கும் நோக்கத்திற்காக பதினெட்டு அல்லது அதற்கு மேல் வயதுடைய மகளிர், குடும்பத்தின் தலைவராக இருத்தல். 9


## அத்தியாயம் VII

## குறை தீர்ப்பு இயக்கமுறை


14. உள் குறை தீர்ப்பு இயக்க முறை. 9

15. மாவட்ட குறை தீர்ப்பு அலுவலர். 10

16. மாநில உணவு ஆணையம். 10

17. மாநில ஆணையத்தின் தலைமையர், உறுப்பினர், உறுப்பினர் செயலர் மற்றும் பிற பணியாளர் தொகுதியினரின் வரையூதியமும் படித் தொகைகளும். 13

18. மாநில ஆணையமாகச் செயல்படுவதற்கு ஆணையம் அல்லது குழுமம் எதனையும் பெயர் குறித்து அமர்த்துதல். 13

19. கூட்டு மாநில உணவு ஆணையம். 13

20. விசாரணைகள் தொடர்பான அதிகாரங்கள். 13

21. காலியிடங்கள் முதலானவை மாநில ஆணையத்தின் நடவடிக்கைகளை செல்லா நிலையதாக்காது. 14


## அத்தியாயம் VIII

## உணவு பாதுகாப்பிற்கான மைய அரசின் கடமைப்பாடுகள்


22. மையப் பொதுச் சேர்மத்திலிருந்து தேவைப்படும் அளவில் உணவு தானியங்களை மாநில அரசுகளுக்குப் பகிர்ந் தொதுக்குதல். 14

23. குறித்தசில நேர்வுகளில் மாநில அரசுக்கு மைய அரசால் அளிக்கப்படும் நிதிகளுக்கான வகையங்கள். 15

## CHAPTER IX

## OBLIGATIONS OF STATE GOVERNMENT FOR FOOD SECURITY

24. Implementation and monitoring of schemes for ensuring food security. 16

## CHAPTER X

## OBLIGATIONS OF LOCAL AUTHORITIES

25. Implementation of Targeted Public Distribution System by local authority in their areas. 17

26. Obligations of local authority. 17

## CHAPTER XI

## TRANSPARENCY AND ACCOUNTABILITY

27. Disclosure of records of Targeted Public Distribution System. 17

28. Conduct of social audit. 18

29. Setting up of Vigilance Committees. 18

## CHAPTER XII

## PROVISIONS FOR ADVANCING FOOD SECURITY

30. Food security for people living in remote, hilly and tribal areas. 19

31. Steps to further advance food and nutritional security. 19

32. Other welfare schemes. 19

33. Penalties. 19

34. Power to adjudicate. 20

## CHAPTER XIII

## MISCELLANEOUS

35. Power to delegate by Central Government and State Government. 20

36. Act to have overriding effect. 20

## அத்தியாயம் IX

### உணவு பாதுகாப்பிற்காக மாநில அரசுக்குள்ள கடமைப்பாடுகள்


24. உணவு பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக திட்டங்களைச் செயல்படுத்துதலும் கண்காணித்து வருதலும். 16


## அத்தியாயம் X

### உள்ளாட்சி அதிகாரஅமைப்புகளின் கடமைப்பாடுகள்


25. உள்ளாட்சி அதிகார அமைப்பினால் தம் பகுதிகளில் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டம் செயல் படுத்தப்படுதல். 17

26. உள்ளாட்சி அதிகாரஅமைப்பின் கடமைப்பாடுகள். 17


## அத்தியாயம் XI

### வெளிப்படைநிலையும் பொறுப்புடைமையும்


27. இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது பங்கீட்டு முறையின் பதிவுருக்களை வெளிப்படுத்துதல். 17

28. சமூகத் தணிக்கை நடத்துதல். 18

29. விழிப்புப்பணிக் குழுக்களை அமைத்தல். 18


## அத்தியாயம் XII

### உணவு பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கான வகையங்கள்


30. நெடுந்தொலைவிலும் மலை மற்றும் பழங்குடியினர் பகுதிகளிலும் வாழ்கின்ற மக்களுக்கான உணவுப் பாதுகாப்பு. 19

31. உணவு மற்றும் சத்துணவுக்குரிய பாதுகாப்பினை மேலும் மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள். 19

32. பிற நலத் திட்டங்கள். 19

33. தண்டனைகள். 19

34. தீர்ப்பளிப்பதற்கான அதிகாரம். 20


## அத்தியாயம் XIII

### பல்வகைப்பட்டவை


35. மைய அரசாலும் மாநில அரசாலும் ஒப்படைவு செய்வதற்கான அதிகாரம். 20

36. சட்டம், மீதூர்ந்தியங்கும் செல்திற முடையது. 20

| | | |
|---|---|---|
| 37. | Power to amend Schedules. | 21 |
| 38. | Power of Central Government to give directions. | 21 |
| 39. | Power of Central Government to make rules. | 21 |
| 40. | Power of State Government to make rules. | 22 |
| 41. | Transitory provisions for schemes, guidelines, etc. | 24 |
| 42. | Power to remove difficulties. | 24 |
| 43. | Utilisation of institutional mechanism for other purposes. | 24 |
| 44. | Force Majeure. | 24 |
| 45. | Repeal and savings. | 25 |
| | SCHEDULE I. | |
| | SCHEDULE II. | |
| | SCHEDULE III. | |
| | SCHEDULE IV. | |

37. இணைப்புப்பட்டியல்களைத் திருத்தம் செய்வதற்கான அதிகாரம். 21

38. பணிப்புரைகள் வழங்குவதற்கு மைய அரசுக்குள்ள அதிகாரம். 21

39. விதிகளைச் செய்வதற்கு மைய அரசுக்குள்ள அதிகாரம். 21

40. விதிகளைச் செய்வதற்கு மாநில அரசுக்குள்ள அதிகாரம். 22

41. திட்டங்கள், வழிகாட்டு நெறிமுறைகள் முதலானவற்றிற் கான மாறுதற்கால வகையங்கள். 24

42. இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம். 24

43. பிற நோக்கங் களுக்காக நிறுவன அமைப்பிலான இயக்கமுறையைப் பயன்படுத்துதல். 24

44. இக்கட்டான நிலைமை. 24

45. நீக்கறவும் காப்புரைகளும். 25

இணைப்புப்பட்டியல் I.

இணைப்புப்பட்டியல் II.

இணைப்புப்பட்டியல் III.

இணைப்புப்பட்டியல் IV.

# THE NATIONAL FOOD SECURITY ACT, 2013

## (No. 20 of 2013)

[10th September, 2013.]

An Act to provide for food and nutritional security in human life cycle approach, by ensuring access to adequate quantity of quality food at affordable prices to people to live a life with dignity and for matters connected therewith or incidental thereto.

BE it enacted by Parliament in the Sixty-fourth Year of the Republic of India as follows:

## CHAPTER I

## PRELIMINARY

Short title, extent and commencement.

1. (1) This Act may be called the National Food Security Act, 2013.

(2) It extends to the whole of India.

(3) Save as otherwise provided, it shall be deemed to have come into force on the 5th day of July, 2013.

Definitions.

2. In this Act, unless the context otherwise requires,

(1) "*anganwadi*" means a child care and development center set up under the Integrated Child Development Services Scheme of the Central Government to render services covered under section 4, clause (*a*) of sub-section (1) of section 5 and section 6;

(2) "central pool" means the stock of food grains which is,

(i) procured by the Central Government and the State Governments through minimum support price operations;

(ii) maintained for allocations under the Targeted Public Distribution System, other welfare schemes, including calamity relief and such other schemes;

# 2013 ஆம் ஆண்டு தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம்

## (எண் 20/2013)

[2013, செப்டம்பர் 10]

மக்கள், கண்ணியமானதொரு வாழ்க்கையை வாழ்வதற்கு, ஏற்றுக்கொள்ளும் விலைகளில் தரமான உணவினை அவர்கள் போதுமான அளவில் பெறும் வாய்ப்பை உறுதி செய்வதன் மூலம் மனிதனின் வாழ்க்கை எனும் சுழல்வட்டப் பாதையில் உணவு மற்றும் சத்துணவு பாதுகாப்பிற்கும் மற்றும் அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்குச் சார்வுறுவான பொருட்பாடுகளுக்கும் வகைசெய்வதற்கானதொரு சட்டம்.

இந்தியக் குடியரசின் அறுபத்து நான்காம் ஆண்டில் நாடாளுமன்றத்தால் பின்வருமாறு சட்டமியற்றப்படுவதாகுக:–

## அத்தியாயம் I

## முன்னுரை

1. (1) இந்தச் சட்டம், 2013 ஆம் ஆண்டு தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் என்று வழங்கப்பெறும். குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

(2) இது, இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.

(3) பிறவாறாக வகைசெய்யப்பட்டிருப்பது நீங்கலாக, இது, 2013 ஆம் ஆண்டு ஜூலை 5 ஆம் நாளன்று செல்லாற்றல் பெற்றிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

2. இந்தச் சட்டத்தில், தறுவாயின் தேவை வேறானாலன்றி,– பொருள் வரையறைகள்.

(1) ''அங்கன்வாடி'' என்பது, 4 ஆம் பிரிவு, 5 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) கூறு மற்றும் 6 ஆம் பிரிவின்படி உள்ளடங்கியுள்ள பணிகளைச் செய்வதற்கு மைய அரசின் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின்படி அமைக்கப்பட்டுள்ள ஒரு குழந்தை பொறுப்புணர்வு மற்றும் வளர்ச்சி மையம் என்று பொருள்படும்.

(2) ''மையச் சேர்மம்'' என்பது,

(i) குறைந்தபட்ச ஆதரவு விலை செயற்பாடுகளின் மூலமாக மைய அரசாலும் மாநில அரசுகளாலும் கொள்முதல் செய்யப்படும்;

(ii) பேரிடர் தீருதவி மற்றும் அத்தகைய பிற திட்டங்கள் உள்ளடங்கலான, இலக்குநிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டத்தின் கீழும், பிற நலத் திட்டங்களின் கீழும் பகிர்ந்தொதுக்கங்களுக்காக வைத்து வரப்படும்;

(iii) kept as reserves for schemes referred to in sub-clause (*ii*);

(3) "eligible households" means households covered under the priority households and the Antyodaya Anna Yojana referred to in sub-section (1) of section 3;

(4) "fair price shop" means a shop which has been licensed to distribute essential commodities by an order issued under section 3 of the Essential Commodities Act, 1955 (10 of 1955), to the ration card holders under the Targeted Public Distribution System; 10/1995.

(5) "foodgrains" means rice, wheat or coarse grains or any combination thereof conforming to such quality norms as may be determined, by order, by the Central Government from time to time;

(6) "food security" means the supply of the entitled quantity of foodgrains and meal specified under Chapter II;

(7) "food security allowance" means the amount of money to be paid by the concerned State Government to the entitled persons under section 8;

(8) "local authority" includes Panchayat, municipality, district board, cantonment board, town planning authority and in the States of Assam, Manipur, Meghalaya, Mizoram, Nagaland and Tripura where Panchayats do not exist, the village council or committee or any other body, by whatever name called, which is authorised under the Constitution or any law for the time being in force for self-governance or any other authority or body vested with the control and management of civic services, within a specified local area;

(9) "meal" means hot cooked or pre-cooked and heated before its service meal or take home ration, as may be prescribed by the Central Government;

(iii). (ii) ஆம் உட்கூறில் குறிப்பிடப்பட்டுள்ள திட்டங்களுக்கான ஒதுக்கீடுகளாக வைக்கப்படும்,

உணவு தானியங்களின் கையிருப்பு என்று பொருள்படும்.

(3) ''தகுமையுடைய குடும்பத்தினர்'' என்பது, 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள முன்னுரிமைக் குடும்பத்தினரின் கீழும் அந்தியோதயா அன்ன யோஜனாவின் கீழும் உள்ளடங்கும் குடும்பத்தினர் என்று பொருள்படும்;

10/1995. (4) ''நியாய விலைக் கடை'' என்பது, 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒன்றின் வாயிலாக, பங்கீடு அட்டை வைத்திருப்போருக்கு இலக்குநிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டத்தின் கீழ் இன்றியமையாப் பண்டங்களைப் பகிர்ந்தளிப்பதற்கு உரிமம் வழங்கப்பட்டிருக்கும் ஒரு கடை என்று பொருள்படும்;

(5) ''உணவு தானியங்கள்'' என்பது, அவ்வப்போது, மைய அரசால், ஆணை வாயிலாகத் தீர்மானிக்கப்படும் அத்தகைய தரவிதிகளை உறுதிப்படுத்தும் அரிசி, கோதுமை அல்லது பருவெட்டு தானியங்கள் அல்லது அவற்றின் கூட்டு எதுவும் என்று பொருள்படும்;

(6) ''உணவு பாதுகாப்பு'' என்பது, II ஆம் அத்தியாயத்தின்படி குறித்துரைக்கப்பட்டுள்ள உரிமை கொண்ட அளவிலான உணவு தானியங்களையும் உணவையும் வழங்குதல் என்று பொருள்படும்;

(7) ''உணவு பாதுகாப்புப் படித்தொகை'' என்பது, 8 ஆம் பிரிவின்படி உரிமைகொண்டவர்களுக்குத் தொடர்புடைய மாநில அரசால் வழங்கப்படவேண்டிய பணத்தொகை என்று பொருள்படும்;

(8) ''உள்ளாட்சி அதிகாரஅமைப்பு'' என்பது, ஊராட்சி, நகராட்சி, மாவட்ட வாரியம், பாளைய வாரியம், நகரமைப்பு அதிகாரஅமைப்பு மற்றும் அங்கு ஊராட்சி இல்லாத அசாம், மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகாலாந்து மற்றும் திரிபுரா மாநிலங்களில், எந்தப் பெயரால் அழைக்கப்பட்டாலும், அரசமைப்பின்படியோ அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதன்படியுமோ அது, சுய ஆளுகைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள ஊராட்சி மன்றம் அல்லது குழு அல்லது பிற குழுமம் அல்லது குறித்துரைக்கப்பட்ட வட்டாரப் பகுதி ஒன்றுக்குள் நகரியப் பணிகளின் கட்டாள்கையும் மேலாண்மையும் உற்றமைந்திருக்கும் பிற அதிகாரஅமைப்பு அல்லது குழுமம் எதனையும் உள்ளடக்கும்;

(9) ''உணவு'' என்பது, சூடாக சமைக்கப்பட்ட அல்லது முன்னரே சமைத்துவைக்கப்பட்ட மற்றும் அதனைப் பரிமாறுவதற்கு முன்னர் சூடேற்றப்பட்ட உணவு அல்லது மைய அரசால் வகுத்துரைக்கப்படலாகிறவாறு வீட்டிற்கு எடுத்துச் செல்லப்படும் பங்கீடு என்று பொருள்படும்;

(10) "minimum support price" means the assured price announced by the Central Government at which foodgrains are procured from farmers by the Central Government and the State Governments and their agencies, for the central pool;

(11) "notification" means a notification issued under this Act and published in the Official Gazette;

(12) "other welfare schemes" means such Government schemes, in addition to the Targeted Public Distribution System, under which foodgrains or meals are supplied as part of the schemes;

(13) "person with disability" means a person defined as such in clause (t) of section 2 of the Persons with Disabilities (Equal Opportunities, Protection of Rights and Full Participation) Act, 1995 (1 of 1996); 1/1996.

(14) "priority households" means households identified as such under section 10;

(15) "prescribed" means prescribed by rules made under this Act;

(16) "ration card" means a document issued under an order or authority of the State Government for the purchase of essential commodities from the fair price shops under the Targeted Public Distribution System;

(17) "rural area" means any area in a State except those areas covered by any urban local body or a cantonment board established or constituted under any law for the time being in force;

(18) "Schedule" means a Schedule appended to this Act;

(19) "senior citizen" means a person defined as such under clause (h) of section 2 of the Maintenance and Welfare of Parents and Senior Citizens Act, 2007 (56 of 2007); 56/2007.

(10) ''குறைந்தபட்ச ஆதரவு விலை'' என்பது, மையச் சேர்மத்திற்காக, மைய அரசால் பொது அறிவிப்பு செய்யப்பட்டும் எந்த உறுதிப்படுத்தப்பட்ட விலையில் மைய அரசாலும் மாநில அரசுகளாலும் மற்றும் அவற்றின் நிறுவனங்களாலும் உழவர்களிடமிருந்து உணவு தானியங்கள் கொள்முதல் செய்யப்படுகின்றனவோ அந்த உறுதிப்படுத்தப்பட்ட விலை என்று பொருள்படும்;

(11) ''அறிவிக்கை'' என்பது, இந்தச் சட்டத்தின்படி வெளியாவதும் மற்றும் அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படுவதுமான ஓர் அறிவிக்கை என்று பொருள்படும்;

(12) ''பிற நலத் திட்டங்கள்'' என்பது, இலக்குநிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டத்துடன்கூட உள்ள எந்த அரசுத் திட்டங்களின்படி, செயல்திட்டங்களின் பகுதியாக உணவு தானியங்களோ உணவுகளோ வழங்கப்படுகின்றனவோ அந்த அரசுத் திட்டங்கள் என்று பொருள்படும்.

1/1996. (13) ''மாற்றுத் திறனாளி'' என்பது, 1995 ஆம் ஆண்டு உடல் ஊனமுற்றவர் (சம வாய்ப்புகள், உரிமைகளை பாதுகாத்தல் மற்றும் முழுமையாகப் பங்குகொள்ளுதல்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (ந) கூறில் அவ்வாறாகப் பொருள்வரையறை செய்யப்பட்டுள்ள ஒருவர் என்று பொருள்படும்;

(14) ''முன்னுரிமை குடும்பத்தினர்'' என்பது, 10 ஆம் பிரிவின்படி அவ்வாறாகக் கண்டறியப்பட்டுள்ள குடும்பத்தினர் என்று பொருள்படும்;

(15) ''வகுத்துரைக்கப்பட்ட'' என்பது, இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளினால் வகுத்துரைக்கப்பட்டது என்று பொருள்படும்;

(16) ''பங்கீடு அட்டை'' என்பது, இலக்குநிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டத்தின்படி நியாயவிலைக் கடைகளிலிருந்து இன்றியமையாப் பண்டங்களை விலைக்கு வாங்குவதற்காக மாநில அரசின் ஆணை அல்லது அதிகாரஅடைவு ஒன்றின்படி வழங்கப்பட்ட ஓர் ஆவணம் என்று பொருள்படும்;

(17) ''ஊரகப் பகுதி'' என்பது, அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதன்படியும் நிறுவப்பட்ட அல்லது அமைக்கப்பட்ட நகர உள்ளாட்சிக் குழுமம் எதனாலும் அல்லது பாளைய வாரியம் ஒன்றினால் உள்ளடக்கப்பட்டுள்ள பகுதிகள் அல்லாத, மாநிலம் ஒன்றிலுள்ள பகுதி எதுவும் என்று பொருள்படும்;

(18) ''இணைப்புப்பட்டியல்'' என்பது, இந்தச் சட்டத்துடன் சேர்க்கப்பட்டுள்ள ஓர் இணைப்புப்பட்டியல் என்று பொருள்படும்;

56/2007. (19) ''மூத்தக் குடிமகன்'' என்பது, 2007 ஆம் ஆண்டு பெற்றோரையும் மூத்தக் குடிமக்களையும் பேணிப் பாதுகாத்தல் மற்றும் அவர்களின் நலவாழ்வு சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (ஏ) கூறின்படி அவ்வாறாகப் பொருள்வரையறை செய்யப்பட்டுள்ள ஒருவர் என்று பொருள்படும்;

(20) "social audit" means the process in which people collectively monitor and evaluate the planning and implementation of a programme or scheme;

(21) "State Commission" means the State Food Commission constituted under section 16;

(22) "State Government", in relation to a Union territory, means the Administrator thereof appointed under article 239 of the Constitution;

(23) "Targeted Public Distribution System" means the system for distribution of essential commodities to the ration card holders through fair price shops;

(24) "Vigilance Committee" means a committee constituted under section 29 to supervise the implementation of all schemes under this Act;

(25) the words and expressions not defined here but defined in the Essential Commodities Act, 1955 or any other relevant Act shall have the meaning respectively assigned to them in those Acts. 10/1955.

## CHAPTER II

## PROVISIONS FOR FOOD SECURITY

Right to receive foodgrains at subsidised prices by persons belonging to eligible households under Targeted Public Distribution System.

3. (1) Every person belonging to priority households, identified under sub-section (1) of section 10, shall be entitled to receive five kilograms of foodgrains per person per month at subsidised prices specified in Schedule I from the State Government under the Targeted Public Distribution System:

Provided that the households covered under Antyodaya Anna Yojana shall, to such extent as may be specified by the Central Government for each State in the said scheme, be entitled to thirty-five kilograms of foodgrains per household per month at the prices specified in Schedule I:

(20) ''சமுதாயத் தணிக்கை'' என்பது, மக்கள் கூட்டாகச் சேர்ந்து ஒரு செயல்முறையோ செயல் திட்டமோ திட்டமிடப்படுவதையும் செயற்படுத்தப்படுவதையும் சரிபார்த்து மதிப்பிடும் செயல்முறை என்று பொருள்படும்;

(21) ''மாநில ஆணையம்'' என்பது, 16 ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்ட மாநில உணவு ஆணையம் என்று பொருள்படும்;

(22) ஒன்றியத்து ஆட்சிநிலவரை ஒன்றைப் பொறுத்து, ''மாநில அரசு'' என்பது, அரசமைப்பின் 239 ஆம் உறுப்பின்படி அமர்த்தப்பெற்ற அதனின் ஆளுகையர் என்று பொருள்படும்;

(23) ''இலக்குநிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டம்'' என்பது, நியாய விலைக் கடைகள் மூலமாக பங்கீடு அட்டை வைத்திருப்போருக்கு இன்றியமையாப் பண்டங்களைப் பகிர்ந்தளிப்பதற்கான திட்டம் என்று பொருள்படும்;

(24) ''விழிப்புப்பணிக் குழு'' என்பது, இந்தச் சட்டத்தின்படியான திட்டங்கள் அனைத்தும் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிப்பதற்கு 29 ஆம் பிரிவின்படி அமைக்கப்பட்ட ஒரு குழு என்று பொருள்படும்;

10/1955. (25) இங்கு பொருள்வரையறை செய்யப்படாத ஆனால் 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தில், அல்லது பிற தொடர்புடைய சட்டம் எதிலும் பொருள்வரையறை செய்யப்பட்டுள்ள சொற்களும் சொற்றொடர்களும் அந்தச் சட்டங்களில் அவற்றிற்கு முறையே குறித்தளிக்கப்பட்டுள்ள பொருள் உடையன ஆகும்.

## அத்தியாயம் II

## உணவு பாதுகாப்பிற்கான வகையங்கள்

இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டத்தின்படி தகுமையுடைய குடும்பத்தினரைச் சார்ந்தவர்கள் மானிய விலைகளில் உணவு தானியங்களைப் பெறுவதற்கான உரிமை.

3. (1) 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி கண்டறியப்பட்டுள்ள, முன்னுரிமை குடும்பத்தினரைச் சார்ந்த நபர் ஒவ்வொருவரும், இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டத்தின்படி மாநில அரசிடமிருந்து I ஆம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள மானிய விலைகளில் நபர் ஒருவருக்கு, மாதம் ஒன்றுக்கு ஐந்து கிலோ கிராம் உணவு தானியங்களைப் பெறுவதற்கு உரிமையுடையவர் ஆவார்:

**வரம்புரையாக:** அந்தியோதயா அன்ன யோஜனாவின் கீழ் உள்ளடக்கப்பட்ட குடும்பத்தினர், மேற்சொன்ன திட்டத்தில் ஒவ்வொரு மாநிலத்திற்காகவும் மைய அரசால் குறித்துரைக்கப்படலாகிற அளவுக்கு, I ஆம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள விலைகளில் குடும்பம் ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு முப்பத்தைந்து கிலோ கிராம் அளவிற்கு உணவு தானியங்களைப் பெறுவதற்கு உரிமை கொண்டிருத்தல் வேண்டும்:

Provided further that if annual allocation of foodgrains to any State under the Act is less than the average annual off take of foodgrains for last three years under normal Targeted Public Distribution System, the same shall be protected at prices as may be determined by the Central Government and the State shall be allocated foodgrains as specified in Schedule IV.

*Explanation*. For the purpose of this section, the "Antyodaya Anna Yojana" means, the scheme by the said name launched by the Central Government on the 25th day of December, 2000; and as modified from time to time.

(2) The entitlements of the persons belonging to the eligible households referred to in sub-section (1) at subsidised prices shall extend up to seventy-five per cent. of the rural population and up to fifty per cent. of the urban population.

(3) Subject to sub-section (1), the State Government may provide to the persons belonging to eligible households, wheat flour in lieu of the entitled quantity of foodgrains in accordance with such guidelines as may be specified by the Central Government.

Nutritional support to pregnant women and lactating mothers.

4. Subject to such schemes as may be framed by the Central Government, every pregnant woman and lactating mother shall be entitled to –

(a) meal, free of charge, during pregnancy and six months after the child birth, through the local *anganwadi*, so as to meet the nutritional standards specified in Schedule II; and

(b) maternity benefit of not less than rupees six thousand, in such instalments as may be prescribed by the Central Government:

Provided that all pregnant women and lactating mothers in regular employment with the Central Government or State Governments or Public Sector Undertakings or those who are in receipt of similar benefits under any law for the time being in force shall not be entitled to benefits specified in clause (*b*).

**மேலும் வரம்புரையாக :** சட்டத்தின்படி மாநிலம் எதற்குமான உணவு தானியங்களின் ஆண்டு பகிர்ந்தொதுக்கமானது வழக்கமான இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டத்தின்படி கடைசி மூன்று ஆண்டுகளுக்கான சராசரி ஆண்டு உணவு தானியங்கள் கொள்முதலுக்குக் குறைவாக இருக்குமாயின், அது மைய அரசால் தீர்மானிக்கப்படலாகிற விலைகளில் காப்பளிக்கப்படுதல் வேண்டும் மற்றும் மாநிலத்திற்கு IV ஆம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு உணவு தானியங்கள் பகிர்ந்தொதுக்கப்படுதல் வேண்டும்.

**விளக்கம்:** இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக, ‘‘அந்தியோதயா அன்ன யோஜனா’’ என்பது, 2000 ஆம் ஆண்டு, டிசம்பர் 25 ஆம் நாளன்று மைய அரசால் மேற்சொன்ன பெயரில் அறிமுகப்படுத்தப்பட்ட மற்றும் அவ்வப்போது மாற்றியமைக்கப்பட்டவாறான திட்டம் என்று பொருள்படும்;

(2). (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தகுமையுடைய குடும்பத்தினரைச் சார்ந்தவர்களின் மானிய விலையில் பெறுவதற்கான உரிமைகள், ஊரக மக்கள் தொகையில் எழுபத்தைந்து சதவீதம் வரையிலும் மற்றும் நகர்ப்புற மக்கள் தொகையில் ஐம்பது சதவீதம் வரையிலும் இருக்கும்.

(3). (1) ஆம் உட்பிரிவிற்கு உட்பட்டு, மாநில அரசு, தகுமையுடைய குடும்பத்தினரைச் சார்ந்தவர்களுக்கு, உரிமை கொண்ட அளவில் உணவு தானியங்களுக்குப் பதிலாக கோதுமை மாவை, மைய அரசால் குறித்துரைக்கப்படலாகும் வழிகாட்டு நெறிமுறைகளின்படி அளிப்பதற்கு வகை செய்யலாம்.

கருவுற்றுள்ள பெண்களுக்கும் பால் கொடுக்கும் தாய்களுக்குமான சத்துணவு உதவி.

4. மைய அரசால் உருவாக்கப்படலாகும் அத்தகைய திட்டங்களுக்கு உட்பட்டு, ஒவ்வொரு கருவுற்றுள்ள பெண்ணும் பால்கொடுக்கும் தாயும்,—

(அ) II ஆம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள தரமான சத்துணவு தரநிலைகளை நிறைவு செய்யும் வகையில், வட்டார அங்கன்வாடி மூலமாக கர்ப்பத்தின்போதும் குழந்தை பிறப்புக்குப் பின்பும் ஆறு மாதங்களுக்கு, கட்டணம் இல்லாத

(ஆ) மைய அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய தவணைகளில் ஆறாயிரம் ரூபாய்க்குக் குறையாத பேறுகால நலப் பயனுக்கும்

உரிமை கொண்டவர் ஆவார்:

**வரம்புரையாக:** மைய அரசிலோ அல்லது மாநில அரசுகளிலோ அல்லது பொதுத்துறை ஏற்பமைவுகளிலோ முறையான வேலையமர்த்தத்தில் உள்ள அல்லது அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள சட்டம் எதன்படியும் அது போன்ற நலப்பயன்களைப் பெற்று வருகின்ற அனைத்து கருவுற்றுள்ளப் பெண்களும் பால்கொடுக்கும் தாய்களும் (ஆ) கூறில் குறித்துரைக்கப்பட்டுள்ள நலப்பயன்களுக்கு உரிமை கொண்டவர் ஆகார்.

**Nutritional support to children.**

5. (1) Subject to the provisions contained in clause (*b*), every child up to the age of fourteen years shall have the following entitlements for his nutritional needs, namely: —

(a) in the case of children in the age group of six months to six years, age appropriate meal, free of charge, through the local anganwadi so as to meet the nutritional standards specified in Schedule II:

Provided that for children below the age of six months, exclusive breast feeding shall be promoted;

(b) in the case of children, up to class VIII or within the age group of six to fourteen years, whichever is applicable, one mid-day meal, free of charge, everyday, except on school holidays, in all schools run by local bodies, Government and Government aided schools, so as to meet the nutritional standards specified in Schedule II.

(*2*) Every school, referred to in clause (*b*) of sub-section (1), and *anganwadi* shall have facilities for cooking meals, drinking water and sanitation:

Provided that in urban areas facilities of centralised kitchens for cooking meals may be used, wherever required, as per the guidelines issued by the Central Government.

Prevention and management of child malnutrition.

6. The State Government shall, through the local *anganwadi*, identify and provide meals, free of charge, to children who suffer from malnutrition, so as to meet the nutritional standards specified in Schedule II.

Implementation of Schemes for realisation of entitlements.

7. The State Governments shall implement schemes covering entitlements under sections 4, 5 and section 6 in accordance with the guidelines, including cost sharing, between the Central Government and the State Governments in such manner as may be prescribed by the Central Government.

**5. (1). (ஆ)** கூறில் அடங்கியுள்ள வகையங்களுக்கு உட்பட்டு, பதினான்கு வயது வரையிலுள்ள குழந்தை ஒவ்வொன்றும், தன் சத்துணவுத் தேவைகளுக்காக பின்வருவனவற்றைப் பெறுவதற்கு உரிமை கொண்டிருத்தல் வேண்டும், அவையாவன:— சிறார்களுக்கு சத்துணவு உதவி.

(அ) ஆறு மாதங்களிலிருந்து ஆறு ஆண்டுகள் வரையிலான வயதுப் பிரிவிலுள்ள குழந்தைகளைப் பொறுத்தவரை, II ஆம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள சத்துணவு தரநிலைகளை நிறைவு செய்யும் வகையில் வட்டார அங்கன்வாடியின் மூலமாக கட்டணம் இல்லாமல் வயதுக்குப் பொருத்தமான உணவு:

**வரம்புரையாக:** ஆறு மாத வயதுக்குக் கீழ் உள்ள குழந்தைகளுக்கு, தாய்ப்பால் மட்டுமே தரநிலைகளை மேம்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) VIII ஆம் வகுப்பு வரையிலோ அல்லது ஆறிலிருந்து பதினான்கு வயதிற்குள்ளோ இவற்றில் எது பொருந்துமோ அதில், உள்ள குழந்தைகளைப் பொறுத்தவரை, II ஆம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள சத்துணவு தரநிலைகளை நிறைவுசெய்யும் வகையில், உள்ளாட்சிக் குழுமங்களால், அரசால் நடத்தப்படும் அனைத்துப் பள்ளிகளிலும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும், பள்ளி விடுமுறை நாட்களில் தவிர, ஒவ்வொரு நாளும், கட்டணம் இல்லாமல் ஒரு நண்பகல் உணவு.

**(2). (1)** ஆம் உட்பிரிவின் **(ஆ)** கூறில் குறிப்பிடப்பட்டுள்ள, ஒவ்வொரு பள்ளியும், அங்கன்வாடியும் உணவுகளைச் சமைப்பதற்கான, குடிநீர் மற்றும் துப்புரவு வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்:

**வரம்புரையாக:** நகரப் பகுதிகளில் மைய அரசால் வழங்கப்படும் வழிகாட்டுநெறிமுறைகளுக்கு இணங்க, தேவைப்படுமிடத்தெல்லாம், உணவுகள் சமைப்பதற்காக மையப்படுத்தப்பட்ட சமையலறைகள் வசதிகள் பயன்படுத்தப்படலாம்.

**6.** மாநில அரசு, வட்டார அங்கன்வாடி மூலமாக, சத்துணவுக்குறைவினால் துன்புறுகிற சிறார்களைக் கண்டறிந்து அவர்களுக்கு II ஆம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள சத்துணவு தரநிலைகளை நிறைவு செய்யும் வகையில் கட்டணம் இல்லாமல், உணவுகளுக்கு வகை செய்தல் வேண்டும். சிறார்களுக்கு சத்துக்குறைந்த உணவு அளிப்பதைத் தடுத்தலும் மற்றும் மேலாண்மை செய்தலும்.

**7.** மாநில அரசுகள், மைய அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் மைய அரசுக்கும் மாநில அரசுகளுக்கும் இடையே, செலவடைப் பங்கீடு உள்ளடங்கலாக, வழிகாட்டு நெறிமுறைகளுக்கு இணங்க **4** ஆம், **5** ஆம் பிரிவுகளின் மற்றும் **6** ஆம் பிரிவின்படி உரிமைகள் அடங்கியுள்ள திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். உரிமைகொண்ட பயன்களுக்கு செயல்வடிவம் கொடுக்கும் திட்டங்களை செயல்படுத்துதல்.

## CHAPTER III

## FOOD SECURITY ALLOWANCE

Right to receive food security allowance in certain cases.

8. In case of non-supply of the entitled quantities of foodgrains or meals to entitled persons under Chapter II, such persons shall be entitled to receive such food security allowance from the concerned State Government to be paid to each person, within such time and manner as may be prescribed by the Central Government.

## CHAPTER IV

## IDENTIFICATION OF ELIGIBLE HOUSEHOLDS

Coverage of population under Targeted Public Distribution System.

9. The percentage coverage under the Targeted Public Distribution System in rural and urban areas for each State shall, subject to sub-section (*2*) of section 3, be determined by the Central Government and the total number of persons to be covered in such rural and urban areas of the State shall be calculated on the basis of the population estimates as per the census of which the relevant figures have been published.

State Government to prepare guidelines and to identify priority households.

10. (1) The State Government shall, within the number of persons determined under section 9 for the rural and urban areas, identify

(a) the households to be covered under the Antyodaya Anna Yojana to the extent specified under sub-section (1) of section 3, in accordance with the guidelines applicable to the said scheme;

(b) the remaining households as priority households to be covered under the Targeted Public Distribution System, in accordance with such guidelines as the State Government may specify:

Provided that the State Government may, as soon as possible, but within such period not exceeding three hundred and sixty-five days, after the commencement of the Act, identify the eligible households in accordance with the guidelines framed under this sub-section:

Provided further that the State Government shall continue to receive the allocation of foodgrains from the Central Government under the existing Targeted Public Distribution System, till the identification of such households is complete.

## அத்தியாயம் III

### உணவு பாதுகாப்புப் படித்தொகைகள்

8. II ஆம் அத்தியாயத்தின்படி உரிமைகொண்ட நபர்களுக்கு உரிமைகொண்ட அளவுகளில் உணவு தானியங்களோ உணவுகளோ வழங்காத நேர்வில், அத்தகைய நபர்கள், மைய அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய காலத்திற்குள்ளும் முறையிலும் ஒவ்வொரு நபருக்கும் வழங்கப்படவேண்டிய அத்தகைய உணவு பாதுகாப்புப் படித்தொகைகளை தொடர்புடைய மாநில அரசிடமிருந்து பெறுவதற்கு உரிமையுடைவர் ஆவர்.

குறித்த சில நேர்வுகளில் உணவு பாதுகாப்புப் படித் தொகைகளைப் பெறுவதற்கான உரிமை.

## அத்தியாயம் IV

### தகுமையுடைய குடும்பத்தினரைக் கண்டறிதல்

9. ஒவ்வொரு மாநிலத்திற்காகவுமான ஊரக மற்றும் நகரப் பகுதிகளில் இலக்குநிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டத்தின் கீழ் உள்ளடக்க சதவீதம், 3 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுக்கு உட்பட்டு, மைய அரசால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் மற்றும் மாநிலத்தின் அத்தகைய ஊரக மற்றும் நகரப் பகுதிகளில் உள்ளடக்கப்படவேண்டிய நபர்களின் மொத்த எண்ணிக்கையானது, தொடர்புடைய தொகை வெளியிடப்பட்டிருக்கிற மக்கள் கணக்கெடுப்பு எதனின்படியும் மக்கள்தொகை மதிப்பீடுகளின் அடிப்படையிலும் கணக்கிடப்படுதல் வேண்டும்.

இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டத்தின் கீழ் மக்கள்தொகை உள்ளடக்க அளவு.

10. (1) மாநில அரசு, ஊரக மற்றும் நகரப் பகுதிகளுக்காக 9 ஆம் பிரிவின்படி தீர்மானிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கைக்குள்—

மாநில அரசு, வழிகாட்டு நெறி முறைகளைத் தயாரித்தல் மற்றும் முன்னுரிமை குடும்பத்தினரைக் கண்டறிதல்.

(அ) மேற்சொன்ன திட்டத்திற்குப் பொருந்தத்தக்க வழிகாட்டுநெறிமுறைகளுக்கு ஏற்ப 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி குறித்துரைக்கப்பட்டுள்ள அளவுக்கு ''அந்தியோதயா அன்ன யோஜனா'' வின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டிய குடும்பத்தினரைக் கண்டறிதல் வேண்டும்;

(ஆ) மாநிலஅரசு குறித்துரைக்கும் வழிகாட்டு நெறி முறைகளுக்கு ஏற்ப, இலக்குநிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட வேண்டிய முன்னுரிமைக் குடும்பத்தினரென எஞ்சியுள்ள குடும்பத்தினரைக் கண்டறிதல் வேண்டும்:

**வரம்புரையாக:** மாநில அரசு, இயன்ற அளவு விரைவில், ஆனால் சட்டத்தின் தொடக்கத்திற்குப் பின்பு, முந்நூற்று அறுபத்தைந்து நாட்களுக்கு மேற்படாத அத்தகைய காலஅளவிற்குள், இந்த உட்பிரிவின்படி உருவாக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கு ஏற்ப தகுமையுடைய குடும்பத்தினரைக் கண்டறிதல் வேண்டும்:

**மேலும் வரம்புரையாக:** மாநில அரசு, அத்தகைய குடும்பத்தினரைக் கண்டறியப்படுவது முடியும் வரை, இருந்து வரும் இலக்குநிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசிடமிருந்து உணவு தானியங்களின் பகிர்ந்தொதுக்கத்தைத் தொடர்ந்து பெற்று வருதல் வேண்டும்.

(*2*) The State Government shall update the list of eligible households, within the number of persons determined under section 9 for the rural and urban areas, in accordance with the guidelines framed under sub-section (1).

Publication and display of list of eligible households.

11. The State Government shall place the list of the identified eligible households in the public domain and display it prominently.

## CHAPTER V

## REFORMS IN TARGETED PUBLIC DISTRIBUTION SYSTEM

Reforms in Targeted Public Distribution System.

12. (1) The Central and State Governments shall endeavour to progressively undertake necessary reforms in the Targeted Public Distribution System in consonance with the role envisaged for them in this Act.

(2) The reforms shall, *inter alia*, include —

(a) doorstep delivery of foodgrains to the Targeted Public Distribution System outlets;

(b) application of information and communication technology tools including end-to-end computerisation in order to ensure transparent recording of transactions at all levels, and to prevent diversion;

(c) leveraging "aadhaar" for unique identification, with biometric information of entitled beneficiaries for proper targeting of benefits under this Act;

(d) full transparency of records;

(e) preference to public institutions or public bodies such as Panchayats, selfhelp groups, co- operatives, in licensing of fair price shops and management of fair price shops by women or their collectives;

(2) மாநில அரசு, (1) ஆம் உட்பிரிவின்படி உருவாக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளுக்கு ஏற்ப, ஊரக மற்றும் நகரப் பகுதிகளுக்காக, 9 ஆம் பிரிவின்படி தீர்மானிக்கப்பட்ட நபர்களின் எண்ணிக்கைக்குள், தகுமையுடைய குடும்பத்தினர் பட்டியலை நாளது தேதி வரைக்குக் கொண்டு வருதல் வேண்டும்.

தகுமையுடைய குடும்பத்தினர் பட்டியலை வெளியிடுதலும் காட்சிக்கு வைத்தலும்.

11. மாநில அரசு, கண்டறியப்பட்ட தகுமையுடைய குடும்பத்தினர் பட்டியலை பொது அதிகாரஎல்லைக்குள் வைத்து மற்றும் எடுப்பாகத் தெரியும் வகையில் அது காட்சிக்கு வைக்க வேண்டும்.

## அத்தியாயம் V

## இலக்குநிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டத்தில் சீர்திருத்தங்கள்

இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டத்தில் சீர்திருத்தங்கள்.

12. (1) மைய மற்றும் மாநில அரசுகள் இலக்குநிர்ணயிக்கப்பட்ட பொதுப்பகிர்ந்தளிப்புத் திட்டத்தில் இந்தச் சட்டத்தில் அவற்றிற்காக எதிர்பார்க்கப்படும் பங்கிற்கு ஏற்ப படிப்படியாக தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்ளுவதற்கு முனைந்து முயலுதல் வேண்டும்.

(2) சீர்திருத்தங்கள், மற்றவற்றிற்கிடையே, பின்வருவனவற்றை உள்ளடக்கும்,—

(அ) இலக்குநிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டத்தில் விற்பனையிடங்களுக்கு உணவு தானியங்களை வாயிற்படியில் ஒப்படைத்தல்;

(ஆ) அனைத்து நிலைகளிலும் நடவடிக்கைகளை வெளிப்படையாகப் பதிவு செய்வதை உறுதி செய்யும் பொருட்டும், மற்றும் வேறுநோக்கத்திற்குப் பயன்படுத்துவதைத் தவிர்க்கும் பொருட்டும் முற்றிலும் கணினிமயமாக்குதல் உள்ளடங்கலாக தகவல் தொடர்பு மற்றும் தகவல்அனுப்புத் தொழில்நுட்பப் பணிச்சட்டங்களைப் பயன்படுத்துதல்;

(இ) இந்தச் சட்டத்தின்படி பயன்களை முறையாக இலக்கிடுவதற்காக உரிமைகொண்ட பயனாளிகளின் உயிரியலாய்வுத் தகவலுடன், தனித்தன்மை வாய்ந்த வகையில் அடையாளங்காணுதலுக்காக "ஆதார்" ஆற்றலை நாடுதல்;

(ஈ) பதிவுருக்கள் முற்றிலும் வெளிப்படையாக இருத்தல்;

(உ) பெண்கள் அல்லது அவர்களின் கூட்டாளிகள் மூலமாக நியாய விலைக் கடைகளுக்கு உரிமம் வழங்கப்படுவதிலும் நியாயவிலைக் கடைகள் மேலாண்மைசெய்யப்படுவதிலும், ஊராட்சிகள், சுய உதவிக் குழுக்கள், கூட்டுறவுகள் போன்ற பொது நிறுவனங்கள் அல்லது பொது அமைப்புகளுக்கு முன்னுரிமை அளித்தல்;

(f) diversification of commodities distributed under the Public Distribution System over a period of time;

(g) support to local public distribution models and grains banks;

(h) introducing schemes, such as, cash transfer, food coupons, or other schemes, to the targeted beneficiaries in order to ensure their foodgrain entitlements specified in Chapter II, in such area and manner as may be prescribed by the Central Government.

## CHAPTER VI

## WOMEN EMPOWERMENT

Women of eighteen years of age or above to be head of household for purpose of issue of ration cards.

13. (1) The eldest woman who is not less than eighteen years of age, in every eligible household, shall be head of the household for the purpose of issue of ration cards.

(*2*) Where a household at any time does not have a woman or a woman of eighteen years of age or above, but has a female member below the age of eighteen years, then, the eldest male member of the household shall be the head of the household for the purpose of issue of ration card and the female member, on attaining the age of eighteen years, shall become the head of the household for such ration cards in place of such male member.

## CHAPTER VII

## GRIEVANCE REDRESSAL MECHANISM

Internal grievance redressal mechanism.

14. Every State Government shall put in place an internal grievance redressal mechanism which may include call centres, help lines, designation of nodal officers, or such other mechanism as may be prescribed.

(ஊ) ஒருகாலஅளவில் பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்படும் பண்டங்களின் வகைகளைப் பெருக்குதல்;

(எ) வட்டாரப் பொதுப் பகிர்ந்தளிப்பு மாதிரிகளுக்கும் தானிய சேகரிப்பு இடங்களுக்கும் உதவுதல்;

(ஏ) மைய அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பகுதியிலும் முறையிலும், இலக்குநிர்ணயிக்கப்பட்ட பயனாளிகளுக்கு II ஆம் அத்தியாயத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள அவர்களுடைய உணவு தானிய உரிமைப்பயன்களை உறுதி செய்யும் பொருட்டு பண மாற்றம், உணவுச் சீட்டுகள் அல்லது பிற திட்டங்கள் போன்ற திட்டங்களை அறிமுகப்படுத்துதல்.

## அத்தியாயம் VI

## மகளிர் அதிகாரமளிக்கப்பெறுதல்

பங்கீடு அட்டைகள் வழங்கும் நோக்கத்திற்காக பதினெட்டு அல்லது அதற்கு மேல் வயதுடைய மகளிர், குடும்பத்தின் தலைவராக இருத்தல்.

**13. (1)** தகுமையுடைய குடும்பம் ஒவ்வொன்றிலும், எல்லோரிலும் மூத்தவராக இருக்கின்ற பதினெட்டு வயதிற்குக் குறையாமல் இருக்கிற பெண், பங்கீடு அட்டைகள் வழங்கும் நோக்கத்திற்காக குடும்பத்தின் தலைவராக இருத்தல் வேண்டும்.

**(2)** குடும்பம் ஒன்று எச்சமயத்திலும் மகளிர் ஒருவரை அல்லது பதினெட்டு வயதோ அல்லது அதற்கு மேலோ உள்ள மகளிர் ஒருவரைக் கொண்டிராமல், ஆனால் பதினெட்டு வயதுக்குக் கீழ் உள்ள பெண் உறுப்பினர் ஒருவரைக் கொண்டிருக்கிறவிடத்து, அப்போது குடும்பத்தின் எல்லோரிலும் மூத்தவராக இருக்கின்ற ஆண் உறுப்பினர் பங்கீடு அட்டை வழங்கும் நோக்கத்திற்காக குடும்பத்தின் தலைவராக இருத்தல் வேண்டும் மற்றும் அப்பெண் உறுப்பினர், பதினெட்டு வயது நிறைவெய்துவதன் பேரில், அத்தகைய ஆண் உறுப்பினருக்குப் பதிலாக பங்கீடு அட்டைகளுக்காகக் குடும்பத்தின் தலைவராக ஆதல் வேண்டும்.

## அத்தியாயம் VII

## குறை தீர்ப்பு இயக்கமுறை

உள் குறை தீர்ப்பு இயக்க முறை.

**14.** மாநில அரசு ஒவ்வொன்றும், உள் குறை தீர்ப்பு இயக்கமுறை ஒன்றை அமைத்தல் வேண்டும், அது தொலைபேசி அழைப்பு மையங்கள், உதவி தொலைபேசி இணைப்புகள், ஒருங்கிணைப்பு அலுவலர்களை பெயர்குறித்தமர்த்துதல் அல்லது வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய பிற இயக்கமுறை ஆகியவற்றை உள்ளடக்கும்.

District Grievance Redressal Officer.

15. (1) The State Government shall appoint or designate, for each district, an officer to be the District Grievance Redressal Officer for expeditious and effective redressal of grievances of the aggrieved persons in matters relating to distribution of entitled foodgrains or meals under Chapter II, and to enforce the entitlements under this Act.

(2) The qualifications for appointment as District Grievance Redressal Officer and its powers shall be such as may be prescribed by the State Government.

(3) The method and terms and conditions of appointment of the District Grievance Redressal Officer shall be such as may be prescribed by the State Government.

(4) The State Government shall provide for the salary and allowances of the District Grievance Redressal Officer and other staff and such other expenditure as may be considered necessary for their proper functioning.

(5) The officer referred to in sub-section (1) shall hear complaints regarding non-distribution of entitled foodgrains or meals, and matters relating thereto, and take necessary action for their redressal in such manner and within such time as may be prescribed by the State Government.

(6) Any complainant or the officer or authority against whom any order has been passed by officer referred to in sub-section (1), who is not satisfied with the redressal of grievance may file an appeal against such order before the State Commission.

(7) Every appeal under sub-section (*6*) shall be filed in such manner and within such time as may be prescribed by the State Government.

State Food Commission.

16. (1) Every State Government shall, by notification, constitute a State Food Commission for the purpose of monitoring and review of implementation of this Act.

(2) The State Commission shall consist of :-

(a) a Chairperson;

**15. (1)** மாநில அரசு, II ஆம் அத்தியாயத்தின்படி உரிமைகொண்ட உணவு தானியங்களை அல்லது உணவுகளைப் பகிர்ந்தளிப்பது தொடர்பான பொருட்பாடுகளில் குறையுற்றவர்களின் குறைகளை விரைவாகவும் திறம்படவும் தீர்த்து வைப்பதற்காகவும், மற்றும் இந்தச் சட்டத்தின்படி உரிமைகொண்டவற்றை வலிந்து செயற்படுத்துவதற்காகவும், மாவட்ட குறை தீர்ப்பு அலுவலராக இருப்பதற்கு அலுவலர் ஒருவரைப் பதவியமர்த்துதலோ அல்லது பெயர் குறித்தமர்த்துதலோ வேண்டும். மாவட்ட குறை தீர்ப்பு அலுவலர்.

(2) மாவட்ட குறை தீர்ப்பு அலுவலராகப் பதவியமர்த்தத்திற்கான தகுதிப்பாடுகளும் அதன் அதிகாரங்களும் மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

(3) மாவட்ட குறை தீர்ப்பு அலுவலரின் பதவியமர்த்தத்தின் முறையும் மற்றும் வரையுரைகளும் வரைக்கட்டுகளும் மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

(4) மாநில அரசு, மாவட்ட குறை தீர்ப்பு அலுவலரின் மற்றும் பிற பணியாளர் தொகுதியினரின் வரையூதியம் மற்றும் படித்தொகைகளுக்கும் மற்றும் அவர்கள் முறையாகச் செயலாற்றுவதற்காகத் தேவையெனக் கருதலாகும் அத்தகைய பிற செலவினங்களுக்கும் வகைசெய்தல் வேண்டும்.

(5) . (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர், உரிமைகொண்ட உணவு தானியங்களோ உணவுகளோ பகிர்ந்தளிக்கப்படாதது தொடர்பான முறையீடுகளையும், மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்பாடுகளையும், விசாரணை செய்து, மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையிலும் அத்தகைய காலத்திற்குள்ளும் அவற்றைத் தீர்த்து வைப்பதற்காகத் தேவையான நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

(6) எந்த முறையீட்டாளருக்கும் அல்லது அலுவலருக்கும் அல்லது அதிகாரஅமைப்பிற்கும் எதிராக (1) ஆம் உட்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலரால் ஆணை எதுவும் பிறப்பிக்கப்பட்டிருந்து குறை தீர்வினால் மனநிறைவடையாத, அந்த முறையீட்டாளர் அல்லது அலுவலர் அல்லது அதிகாரஅமைப்பு எவரும் அத்தகைய ஆணைக்கு எதிராக மாநில ஆணையத்தின் முன்பு மேல்முறையீடு ஒன்றை முன்னிடலாம்.

(7). (6) ஆம் உட்பிரிவின்படியான மேல்முறையீடு ஒவ்வொன்றும், மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையிலும் அத்தகைய காலத்திற்குள்ளும் முன்னிடப்படுதல் வேண்டும்.

**16. (1)** மாநில அரசு ஒவ்வொன்றும், அறிவிக்கையின் வாயிலாக, இந்தச் சட்டம் செயல்படுத்தப்படுவதைக் கவனித்துவரும் மற்றும் ஆய்வுசெய்யும் நோக்கத்திற்காக மாநில உணவு ஆணையம் ஒன்றை அமைத்தல் வேண்டும். மாநில உணவு ஆணையம்.

(2) மாநில ஆணையம்:—

(அ) தலைமையர் ஒருவரையும்;

(b) five other Members; and

(c) a Member-Secretary, who shall be an officer of the State Government not below the rank of Joint Secretary to that Government:

Provided that there shall be at least two women, whether Chairperson, Member or Member- Secretary:

Provided further that there shall be one person belonging to the Scheduled Castes and one person belonging to the Scheduled Tribes, whether Chairperson, Member or Member-Secretary.

(3) The Chairperson and other Members shall be appointed from amongst persons,-

(a) who are or have been member of the All India Services or any other civil services of the Union or State or holding a civil post under the Union or State having knowledge and experience in matters relating to food security, policy making and administration in the field of agriculture, civil supplies, nutrition, health or any allied field; or

(b) of eminence in public life with wide knowledge and experience in agriculture, law, human rights, social service, management, nutrition, health, food policy or public administration; or

(c) who have a proven record of work relating to the improvement of the food and nutrition rights of the poor.

(4) The Chairperson and every other Member shall hold office for a term not exceeding five years from the date on which he enters upon his office and shall be eligible for reappointment:

Provided that no person shall hold office as the Chairperson or other Member after he has attained the age of sixty-five years.

(ஆ) பிற உறுப்பினர்கள் ஐவரையும் ; மற்றும்

(இ) மாநில அரசின், அந்த அரசின் இணைச் செயலாளர் படிநிலைக்குக் குறையாத ஓர் அலுவலராக இருக்கவேண்டிய, உறுப்பினர்—செயலர் ஒருவரையும்,

கொண்டதாக இருத்தல் வேண்டும்:

**வரம்புரையாக:** தலைமையராகவோ, உறுப்பினராகவோ அல்லது உறுப்பினர்— செயலராகவோ இருப்பினும், குறைந்தது இரண்டு பெண்கள் இருப்பர்:

**மேலும் வரம்புரையாக:** தலைமையராகவோ, உறுப்பினராகவோ அல்லது உறுப்பினர்— செயலராகவோ இருப்பினும், ஒருவர், பட்டியலில் கண்ட சாதிகளைச் சார்ந்தவராகவும் மற்றும் ஒருவர், பட்டியலில்கண்ட பழங்குடியினரைச் சார்ந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

(3) தலைமையரும், பிற உறுப்பினர்களும்,—

(அ) ஒன்றியத்தின் அல்லது மாநிலத்தின் அனைத்திந்தியப் பணிகள் அல்லது பிற குடியியல் பணிகள் எவற்றிலும் உறுப்பினராக இருக்கிற அல்லது இருந்திருக்கிற; அல்லது வேளாண்மை, குடிமைப்பொருட்கள் வழங்கல்கள், சத்துணவு, நலவாழ்வு களத்தில் அல்லது தொடர்புடைய களம் எதிலும் உணவு பாதுகாப்பு, கொள்கையை வகுப்பதில் மற்றும் நிர்வாகம் தொடர்பான பொருட்பாடுகளில் அறிவையும் பட்டறிவும் உடைய ஒன்றியத்தின் கீழுள்ள அல்லது மாநிலத்தின் கீழுள்ள குடியியல் பணி ஒன்றை வகித்து வருகிற; அல்லது

(ஆ) வேளாண்மை, சட்டம், மனித உரிமைகள், சமுதாயப் பணி, மேலாண்மை, சத்துணவு, நலவாழ்வு, உணவுக் கொள்கை அல்லது பொது நிர்வாகம் ஆகியவற்றில், பரந்த அறிவுடனும் பட்டறிவுடனும் பொது வாழ்வில் புகழ்பெற்று விளங்குகிற; அல்லது

(இ) ஏழைகளின் உணவு மற்றும் சத்துணவு, உரிமைகளை மேம்படுத்துதல் தொடர்பான பணியில் நிலைநாட்டப்பட்ட நற்பெயர் ஒன்றைக் கொண்டிருக்கிற,

நபர்களிடையே இருந்து பதவியமர்த்தம் செய்யப்படுதல் வேண்டும்.

(4) தலைமையரும், பிற உறுப்பினர் ஒவ்வொருவரும், தமது பதவியை ஏற்றுக்கொள்கிற தேதியிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு காலத்திற்குப் பதவி வகித்தல் வேண்டும் மற்றும் மறுபதவியமர்த்தத்திற்குத் தகுமையுடையவர் ஆவர்:

**வரம்புரையாக:—** நபர் எவரும், அவர், அறுபத்தைந்து வயதினை நிறைவெய்திய பின்பு தலைமையராகவோ பிற உறுப்பினராகவோ பதவி வகித்தல் ஆகாது.

(5) The method of appointment and other terms and conditions subject to which the Chairperson, other Members and Member-Secretary of the State Commission may be appointed, and time, place and procedure of meetings of the State Commission (including the quorum at such meetings) and its powers, shall be such as may be prescribed by the State Government.

(6) The State Commission shall undertake the following functions, namely:—

(a) monitor and evaluate the implementation of this Act, in relation to the State;

(b) either suo motu or on receipt of complaint inquire into violations of entitlements provided under Chapter II;

(c) give advice to the State Government on effective implementation of this Act;

(d) give advice to the State Government, their agencies, autonomous bodies as well as non- governmental organisations involved in delivery of relevant services, for the effective implementation of food and nutrition related schemes, to enable individuals to fully access their entitlements specified in this Act;

(e) hear appeals against orders of the District Grievance Redressal Officer;

(f) prepare annual reports which shall be laid before the State Legislature by the State Government.

(7) The State Government shall make available to the State Commission, such administrative and technical staff, as it may consider necessary for proper functioning of the State Commission.

(8) The method of appointment of the staff under sub-section (*7*), their salaries, allowances and conditions of service shall be such, as may be prescribed by the State Government.

(9) The State Government may remove from office the Chairperson or any Member who —

(a) is, or at any time has been, adjudged as an insolvent; or

(5) மாநில ஆணையத்தின் தலைமையர், பிற உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்– செயலர் ஆகியோரைப் பதவியமர்த்தும் முறை மற்றும் எந்தப் பிற வரையுரைகளுக்கும் வரைக்கட்டுகளுக்கும் உட்பட்டு அவர்கள் பதவியமர்த்தப்படலாம் என்பதும், மற்றும் மாநில ஆணையத்தின் (கூட்டங்களில் குறைவெண் உள்ளடங்கலாக) அத்தகைய கூட்டங்களின் நேரம், இடம் மற்றும் நெறிமுறை மற்றும் அதன் அதிகாரங்கள், மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

(6) மாநில ஆணையம், பின்வரும் செயற்பணிகளை மேற்கொள்ளுதல் வேண்டும், அவையாவன:–

(அ) மாநிலத்தைப் பொறுத்து, இந்தச் சட்டம் செயல்படுத்தப்படுவதைக் கண்காணித்து மதிப்பிடுதல்;

(ஆ) II ஆம் அத்தியாயத்தின்படி வகைசெய்யப்பட்டுள்ள உரிமை கொண்டவற்றிற்கு மீறுகைகள் குறித்து தானே முற்பட்டோ அல்லது முறையீடு பெறுவதன் பேரிலோ விசாரணை செய்தல்;

(இ) இந்தச் சட்டத்தைத் திறம்பட செயல்படுத்துவது பொறுத்து மாநில அரசுக்குத் தேர்வுரை வழங்குதல்;

(ஈ) தனிமனிதர்கள், இந்தச் சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டுள்ள தம் உரிமைப்பயன்களை முழுமையாகக் கைக்கொள்ளும் வாய்ப்பினை இயல்விக்கும் பொருட்டு, உணவு மற்றும் சத்துணவு தொடர்பான திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்துவதற்காக, தொடர்புற்ற பணிகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள மாநில அரசு, அவற்றின் நிறுவனங்கள், தன்னாட்சி குழுமங்கள் அத்துடன் அரசு சாரா அமைப்புகள் ஆகியவற்றிற்கு தேர்வுரை வழங்குதல்;

(உ) மாவட்ட குறை தீர்ப்பு அலுவலரின் ஆணைகளுக்கு எதிரான மேல்முறையீடுகளை விசாரணை செய்தல்;

(ஊ) மாநில அரசால் மாநில சட்டமன்றத்தின் முன்பு வைக்கப்படவேண்டிய ஆண்டு அறிக்கைகளைத் தயாரித்தல்.

(7) மாநில ஆணையம் முறையாக செயற்பணியாற்றுவதற்காக மாநில அரசு, தான் தேவையெனக் கருதுகிற அத்தகைய நிர்வாகப்பணி மற்றும் தொழில்நுட்பப் பணியாளர் தொகுதியினரை மாநில ஆணையத்திற்குக் கிடைக்குமாறு செய்தல் வேண்டும்.

(8). (7) ஆம் உட்பிரிவின்படி பணியாளர் தொகுதியினரைப் பணியமர்த்தும் முறை, அவர்களின் வரையூதியங்கள், படித்தொகைகள் மற்றும் பணி வரைக்கட்டுகள், மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகிறவாறு இருத்தல் வேண்டும்.

(9) மாநில அரசு,–

(அ) நொடித்துப்போனவர் என்று தீர்ப்பளிக்கப்பட்டிருக்கும், அல்லது எச்சமயத்திலேனும் தீர்ப்பளிக்கப்பட்டிருந்திருக்கும்; அல்லது

(b) has become physically or mentally incapable of acting as a member; or

(c) has been convicted of an offence which, in the opinion of the State Government, involves moral turpitude; or

(d) has acquired such financial or other interest as is likely to affect prejudicially his functions as a member; or

(e) has so abused his position as to render his continuation in office detrimental to the public interest.

(10) No such Chairperson or Member shall be removed under clause (*d*) or clause (*e*) of sub-section (9) unless he has been given a reasonable opportunity of being heard in the matter.

Salary and allowances of Chairperson, Member, Member-Secretary and other staff of State Commission.

17. The State Government shall provide for salary and allowances of Chairperson, other Members, Member-Secretary, support staff, and other administrative expenses required for proper functioning of the State Commission.

Designation of any Commission or body to function as State Commission.

18. The State Government may, if considers it necessary, by notification, designate any statutory commission or a body to exercise the powers and perform the functions of the State Commission referred to in section 16.

Joint State Food Commission.

19. Notwithstanding anything contained in sub-section (1) of section 16, two or more States may have a Joint State Food Commission for the purposes of this Act with the approval of the Central Government.

Powers relating to inquiries.

20. (1) The State Commission shall, while inquiring into any matter referred to in clauses (*b*) and (*e*) of sub-section (*6*) of section 16, have all the powers of a civil court while trying a suit under the Code of Civil Procedure, 1908 (5 of 1908) and, in particular, in respect of the following matters, namely:- 5/1908.

(ஆ) ஓர் உறுப்பினராகச் செயலுறுவதற்கு உடல்நிலை காரணமாகவோ அல்லது மனநிலை காரணமாகவோ திறனற்றவராகியிருக்கும்; அல்லது

(இ) ஒழுக்கநெறி தீயொழுக்கம் உள்ளடக்கியது என மாநில அரசு கருதும் ஒரு குற்றச்செயலுக்காகக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டிருந்திருக்கும்; அல்லது

(ஈ) ஓர் உறுப்பினராகத் தன் செயற்பணிகளை குந்தகமாகப் பாதிக்கக்கூடிய வகையில் அத்தகைய நிதியியல் அல்லது பிற அக்கறைகளை கொண்டிருக்கும்; அல்லது

(உ) பதவியில் அவர் தொடர்ந்து இருப்பது பொது நலனுக்குக் குந்தகம் ஆக்கும் வகையில் தன் தகுநிலையை நெறிதவறிப் பயன்படுத்தியிருக்கும்

தலைமையரை அல்லது உறுப்பினர் எவரையும் பதவியிலிருந்து அகற்றலாம்.

(10) அத்தகைய தலைமையரோ உறுப்பினரோ பொருட்பாட்டில் விசாரிக்கப்படும் தகுமான வாய்ப்பு ஒன்று அவருக்கு நல்கப்பட்டிருந்தாலன்றி, (9) ஆம் உட்பிரிவின் (ஈ) கூறின்படியோ அல்லது (உ) கூறின்படியோ அவர் அகற்றப்படுதலாகாது.

மாநில ஆணையத்தின் தலைமையர், உறுப்பினர், உறுப்பினர் செயலர் மற்றும் பிற பணியாளர் தொகுதியினரின் வரையூதியமும் படித் தொகைகளும்.

17. மாநில அரசு, தலைமையர், பிற உறுப்பினர்கள், உறுப்பினர்–செயலர், ஆதாரப் பணியாளர் தொகுதியினர் ஆகியோரின் வரையூதியம் மற்றும் படித்தொகைகளுக்கும் மற்றும் மாநில ஆணையம் முறையாகச் செயற்பணியாற்றுவதற்காகத் தேவைப்படும் பிற நிர்வாகச் செலவுகளுக்கும் வகை செய்தல் வேண்டும்.

மாநில ஆணையமாகச் செயல்படுவதற்கு ஆணையம் அல்லது குழுமம் எதனையும் பெயர்க் குறித்து அமர்த்துதல்.

18. மாநில அரசு, அது தேவையெனக் கருதுமாயின், அறிவிக்கையின் வாயிலாக, 16ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மாநில ஆணையத்தின் அதிகாரங்களைச் செலுத்துவதற்கும் செயற்பணிகளைப் புரிவதற்கும் சட்டமுறையான ஆணையம் எதனையும் அல்லது குழுமம் ஒன்றைப் பெயர்க் குறித்து அமர்த்தலாம்.

கூட்டு மாநில உணவு ஆணையம்.

19. 16 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மைய அரசின் ஒப்பேற்புடன் இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்கள், கூட்டு மாநில உணவு ஆணையம் ஒன்றைக் கொண்டிருக்கலாம்.

விசாரணைகள் தொடர்பான அதிகாரங்கள்.

20.(1) மாநில ஆணையம், 16 ஆம் பிரிவின் (6) ஆம் உட்பிரிவின் (ஆ) மற்றும் (உ) கூறுகளில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்பாடு எதனைப்
5/1908. பொறுத்தும் விசாரணை செய்யுங்கால், 1908 ஆம் ஆண்டு உரிமையியல் நெறிமுறைத் தொகுப்புச்சட்டத்தின்படி உரிமையியல் வழக்கு ஒன்றை விசாரணை செய்யுங்கால், மற்றும், குறிப்பாக, பின்வரும் பொருட்பாடுகள் பொறுத்தும், உரிமையியல் நீதிமன்றம் ஒன்றின் அதிகாரங்கள் அனைத்தையும் கொண்டிருத்தல் வேண்டும், அவையாவன:–

(a) summoning and enforcing the attendance of any person and examining him on oath;

(b) discovery and production of any document;

(c) receiving evidence on affidavits;

(d) requisitioning any public record or copy thereof from any court or office; and

(e) issuing commissions for the examination of witnesses or documents.

(*2*) The State Commission shall have the power to forward any case to a Magistrate having jurisdiction to try the same and the Magistrate to whom any such case is forwarded shall proceed to hear the complaint against the accused as if the case has been forwarded to him under section 346 of the Code of Criminal Procedure, 1973 (2 of 1974). 2/1974.

Vacancies, etc., not to invalidate proceedings of State Commission.

21. No act or proceeding of the State Commission shall be invalid merely by reason of -

(a) any vacancy in, or any defect in the constitution of, the State Commission; or

(b) any defect in the appointment of a person as the Chairperson or a Member of the State Commission; or

(c) any irregularity in the procedure of the State Commission not affecting the merits of the case.

## CHAPTER VIII

## OBLIGATIONS OF CENTRAL GOVERNMENT FOR FOOD SECURITY

Central Government to allocate required quantity of foodgrains from central pool to State Governments.

22. (1) The Central Government shall, for ensuring the regular supply of foodgrains to persons belonging to eligible households, allocate from the central pool the required quantity of foodgrains to the State Governments under the Targeted Public Distribution System, as per the entitlements under section 3 and at prices specified in Schedule I.

(அ) எவருக்கும் அழைப்பாணை விடுத்து அவர் முன்னிலையாவதைக் கட்டாயப்படுத்துதல் மற்றும் ஆணைமொழியின் பேரில் அவரை விசாரணை செய்தல்;

(ஆ) ஆவணம் எதனையும் வெளிக் கொணர்தல் மற்றும் முன்னிலைப்படுத்தச் செய்தல்;

(இ) ஆணை உறுதி ஆவணங்களின் பேரில் சான்றினைப் பெறுதல்;

(ஈ) நீதிமன்றம் அல்லது அலுவலகம் எதிலுமிருந்தும் பொதுப் பதிவுரு எதனையும் அல்லது அதனின் நகலைக் கோரிப் பெறுதல்; மற்றும்

(உ) சான்றளிப்பவர்களை அல்லது ஆவணங்களை ஆராய்வதற்காக ஆணைகளைப் பிறப்பித்தல்.

(2) மாநில ஆணையம், வழக்கு எதனையும், அதனை விசாரணை செய்வதற்கு அதிகாரவரம்பு கொண்டிருக்கும் குற்றவியல் நடுவர் ஒருவருக்கு அனுப்பிவைப்பதற்கு அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும் மேலும் அத்தகைய வழக்கு எதுவும், எந்தக் குற்றவியல் நடுவருக்கு அனுப்பிவைக்கப்படுகிறதோ அந்தக் குற்றவியல் நடுவர் குற்றஞ்சார்த்தப்பட்டவருக்கு எதிரான முறையீட்டின் மீது 1973 ஆம் ஆண்டு குற்றவியல் நெறிமுறைத் தொகுப்புச்சட்டத்தின் 346 ஆம் பிரிவின்படி தமக்கு அனுப்பிவைக்கப்பட்டிருப்பதை விசாரணை செய்ய முற்படுதல் வேண்டும். 2/1974.

21. மாநில ஆணையத்தின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும்,— காலியிடங்கள் முதலியவை மாநில ஆணையத்தின் நடவடிக்கைகளை செல்லா நிலையதாக்காது.

(அ) மாநில ஆணையத்தில் உள்ள காலியிடம் எதனின், அல்லது அதன் அமைப்பாக்கத்தில் உள்ள குறைபாடு எதனின்; அல்லது

(ஆ) மாநில ஆணையத்தின் தலைமையராக அல்லது ஓர் உறுப்பினராக ஒருவரின் பதவியமர்த்தத்தில் உள்ள குறைபாடு எதனின்; அல்லது

(இ) வழக்கின்தகுதிகளைப் பாதிக்காத மாநில ஆணையத்தின் நெறிமுறையைப் பின்பற்றியதில் உள்ள முறைகேடு எதனின்,

காரணத்தினால் மட்டுமே செல்லாநிலையது ஆகாது.

## அத்தியாயம் VIII

## உணவு பாதுகாப்பிற்கான மைய அரசின் கடமைப்பாடுகள்

22. (1) மைய அரசு, தகுமையுடைய குடும்பத்தினரைச் சார்ந்த நபர்களுக்கு உணவு தானியங்கள் உரிய காலமுறையில் வழங்குவதை உறுதிசெய்வதற்காக, 3 ஆம் பிரிவின்படி உரிமை கொண்டவற்றின்படியும் I ஆம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள விலைகளிலும் இலக்குநிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டத்தின் கீழ், மாநில அரசுகளுக்குத் தேவையான அளவில் உணவு தானியங்களை, மையப் பொதுச் சேர்மத்திலிருந்து பகிர்ந்தொதுக்குதல் வேண்டும். மையப் பொதுச் சேர்மத்திலிருந்து தேவைப்படும் அளவில் உணவு தானியங்களை மாநில அரசுகளுக்குப் பகிர்ந்–தொதுக்குதல் .

(2) The Central Government shall allocate foodgrains in accordance with the number of persons belonging to the eligible households identified in each State under section 10.

(3) The Central Government shall provide foodgrains in respect of entitlements under sections 4, 5 and section 6, to the State Governments, at prices specified for the persons belonging to eligible households in Schedule I.

(4) Without prejudice to sub-section (1), the Central Government shall,—

(a) procure foodgrains for the central pool through its own agencies and the State Governments and their agencies;

(b) allocate foodgrains to the States;

(c) provide for transportation of foodgrains, as per allocation, to the depots designated by the Central Government in each State;

(d) provide assistance to the State Government in meeting the expenditure incurred by it towards intra-State movement, handling of foodgrains and margins paid to fair price shop dealers, in accordance with such norms and manner as may be prescribed by the Central Government; and

(e) create and maintain required modern and scientific storage facilities at various levels.

Provisions for funds by Central Government to State Government in certain cases.

23. In case of short supply of foodgrains from the central pool to a State, the Central Government shall provide funds to the extent of short supply to the State Government for meeting obligations under Chapter II in such manner as may be prescribed by the Central Government.

(2) மைய அரசு, 10 ஆம் பிரிவின்படி ஒவ்வொரு மாநிலத்திலும் கண்டறியப்பட்ட தகுமையுடைய குடும்பத்தினரைச் சார்ந்தவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப உணவு தானியங்களைப் பகிர்ந்தொதுக்குதல் வேண்டும்.

(3) மைய அரசு, I ஆம் இணைப்புப்பட்டியலில் தகுமையுடைய குடும்பத்தினரைச் சார்ந்தவர்களுக்காகக் குறித்துரைக்கப்பட்டுள்ள விலைகளில், மாநில அரசுகளுக்கு, 4 ஆம், 5 ஆம் பிரிவுகளின்படியும் 6 ஆம் பிரிவின்படியும் உரிமை கொண்டதைப் பொறுத்து உணவு தானியங்களை வகைசெய்தல் வேண்டும்.

(4). (1) ஆம் உட்பிரிவிற்குக் குந்தகமின்றி, மைய அரசு,—

(அ) மையப் பொதுச் சேர்மத்திற்கான உணவு தானியங்களைத் தன் சொந்த நிறுவனங்கள் மூலமாகவும் மற்றும் மாநில அரசுகள் மற்றும் அவற்றின் நிறுவனங்கள் மூலமாகவும் கொள்முதல் செய்தல் வேண்டும்;

(ஆ) மாநிலங்களுக்கு உணவு தானியங்களைப் பகிர்ந்தொதுக்குதல் வேண்டும்;

(இ) பகிர்ந்தொதுக்கப்பட்டபடி, உணவு தானியங்களை, மாநிலம் ஒவ்வொன்றிலும் மைய அரசால் நியமிக்கப்பட்ட கிடங்கிற்கு ஏற்றிச்செல்லப்படுவதற்கு வகைசெய்தல் வேண்டும்;

(ஈ) மைய அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய நெறிகளுக்கும் முறைக்கும் ஏற்ப, உணவு தானியங்களை மாநிலத்திற்குள் எடுத்துச் செல்லுதல், கையாளுதல் மற்றும் நியாய விலைக் கடை வணிகர்களுக்கு வழங்கப்படும் விடுமிகைதொகை பொருட்டு மாநில அரசால் செய்யநேரிட்ட செலவினங்களைச் செய்வதில், அதற்கு உதவி செய்தல் வேண்டும்; மற்றும்

(உ) பல்வேறு நிலைகளில் தேவைப்படும் தற்கால அறிவியல் சேகரிப்பு வசதிகளை உருவாக்கி பேணிவருதல் வேண்டும்.

குறித்தசில நேர்வுகளில் மாநில அரசுக்கு மைய அரசால் அளிக்கப்படும் நிதிகளுக்கான வகையங்கள்.

**23.** மையப் பொதுச் சேர்மத்திலிருந்து உணவு தானியங்கள் மாநிலம் ஒன்றிற்குக் குறைவாக வழங்கப்படும் நேர்வில், மைய அரசு, II ஆம் அத்தியாயத்தின்படியான கடமைப்பாடுகளை நிறைவுசெய்வதற்காக மைய அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில் குறைவான வழங்கீட்டின் அளவுக்கு நிதிகளை மாநில அரசுக்கு வகை செய்தல் வேண்டும்.

## CHAPTER IX

## OBLIGATIONS OF STATE GOVERNMENT FOR FOOD SECURITY

Implementation and monitoring of schemes for ensuring food security.

24. (1) The State Government shall be responsible for implementation and monitoring of the schemes of various Ministries and Departments of the Central Government in accordance with guidelines issued by the Central Government for each scheme, and their own schemes, for ensuring food security to the targeted beneficiaries in their State.

(2) Under the Targeted Public Distribution System, it shall be the duty of the State Government to—

(a) take delivery of foodgrains from the designated depots of the Central Government in the State, at the prices specified in Schedule I, organise intra-State allocations for delivery of the allocated foodgrains through their authorised agencies at the door-step of each fair price shop; and

(b) ensure actual delivery or supply of the foodgrains to the entitled persons at the prices specified in Schedule I.

(3) For foodgrain requirements in respect of entitlements under sections 4, 5 and section 6, it shall be the responsibility of the State Government to take delivery of foodgrains from the designated depots of the Central Government in the State, at the prices specified in Schedule I for persons belonging to eligible households and ensure actual delivery of entitled benefits, as specified in the aforesaid sections.

(4) In case of non-supply of the entitled quantities of foodgrains or meals to entitled persons under Chapter II, the State Government shall be responsible for payment of food security allowance specified in section 8.

(5) For efficient operations of the Targeted Public Distribution System, every State Government shall,—

## அத்தியாயம் IX

## உணவு பாதுகாப்பிற்காக மாநில அரசுக்குள்ள கடமைப்பாடுகள்

24. (1) மாநில அரசு, தம் மாநிலத்தில் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பயனாளிகளுக்கு உணவு பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக, ஒவ்வொரு திட்டத்திற்காகவும் மைய அரசால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளுக்கு ஏற்ப மைய அரசின் பல்வேறு அமைச்சகங்களின் மற்றும் துறைகளின் திட்டங்களையும், தம் சொந்த திட்டங்களையும், செயல்படுத்துவதற்கும் கண்காணித்துவருவதற்கும் பொறுப்புடையது ஆகும்.

உணவு பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக திட்டங்களைச் செயல்படுத்துதலும் கண்காணித்து வருதலும்.

(2) இலக்குநிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டத்தின்கீழ்—

(அ) மாநிலத்தில் உள்ள மைய அரசினால் நியமிக்கப்பட்ட கிடங்குகளிலிருந்து, Iஆம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள விலைகளில், உணவு தானியங்களை ஒப்படைவு பெறுதல், பகிர்ந்தொதுக்கப்பட்ட உணவு தானியங்களைத் தம் அதிகாரமளிக்கப்பெற்ற நிறுவனங்கள் மூலமாக நியாய விலைக் கடை ஒவ்வொன்றின் வாயிற்படியிலும் ஒப்படைப்பதற்காக உள்மாநிலப் பகிர்ந்தொதுக்கீடுகளுக்கு ஏற்பாடு செய்வதும்; மற்றும்

(ஆ) I ஆம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள விலைகளில், உரிமைகொண்ட நபர்களுக்கு உணவு தானியங்களை உள்ளபடியே ஒப்படைவு செய்யப்படுவதை அல்லது வழங்கப்படுவதை உறுதி செய்வதும்

மாநில அரசுக்குள்ள கடமையாக இருத்தல் வேண்டும்.

(3). 4 ஆம், 5 ஆம் பிரிவுகளின்படியும் மற்றும் 6 ஆம் பிரிவின்படியும் உரிமைகொண்டவை பொறுத்த உணவு தானிய தேவைகளுக்கு, தகுமையுடைய குடும்பத்தினரைச் சாா்ந்தவா்களுக்காக I ஆம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள விலைகளில் மாநிலத்தில் உள்ள மைய அரசின் நியமனக் கிடங்குகளிலிருந்து உணவு தானியங்களை ஒப்படைவு பெறுவதும் மேலே கண்ட பிரிவுகளில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு, உரிமையுள்ள பயன்கள் உள்ளபடியே வழங்கப்படுவதை உறுதி செய்வதும் மாநில அரசுக்குள்ள பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

(4). II ஆம் அத்தியாயத்தின்படி உரிமை கொண்ட நபர்களுக்கு உரிமைகொண்ட அளவுகளில் உணவு தானியங்களோ அல்லது உணவுகளோ வழங்கப்படாத நேர்வில், 8ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்டுள்ள உணவு பாதுகாப்புப் படித்தொகை வழங்குவதற்கு மாநிலஅரசு பொறுப்புடையதாகும்.

(5) இலக்குநிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டத் திறப்பாட்டுடன் செயல்படுவதற்காக மாநில அரசு ஒவ்வொன்றும்,—

(a) create and maintain scientific storage facilities at the State, District and Block levels, being sufficient to accommodate foodgrains required under the Targeted Public Distribution System and other food based welfare schemes;

(b) suitably strengthen capacities of their Food and Civil Supplies Corporations and other designated agencies;

(c) establish institutionalised licensing arrangements for fair price shops in accordance with the relevant provisions of the Public Distribution System (Control) Order, 2001 made under the Essential Commodities Act, 1955 (10 of 1955), as amended from time. 10/1955.

## CHAPTER X

## OBLIGATIONS OF LOCAL AUTHORITIES

Implementation of Targeted Public Distribution System by local authority in their areas.

25. (1) The local authorities shall be responsible for the proper implementation of this Act in their respective areas.

(2) Without prejudice to sub-section (1), the State Government may assign, by notification, additional responsibilities for implementation of the Targeted Public Distribution System to the local authority.

Obligations of local authority.

26. In implementing different schemes of the Ministries and Departments of the Central Government and the State Governments, prepared to implement provisions of this Act, the local authorities shall be responsible for discharging such duties and responsibilities as may be assigned to them, by notification, by the respective State Governments.

## CHAPTER XI

## TRANSPARENCY AND ACCOUNTABILITY

Disclosure of records of Targeted Public Distribution System.

27. All Targeted Public Distribution System related records shall be placed in the public domain and kept open for inspection to the public, in such manner as may be prescribed by the State Government.

(அ) இலக்குநிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டத்தின் கீழும் பிற உணவை அடிப்படையாகக் கொண்ட நலத் திட்டங்களின்கீழும் தேவைப்படும் உணவு தானியங்களை வைப்பதற்குப் போதுமானதாக இருக்கும், அறிவியல்சார் பண்டக வைப்பு வசதிகளை மாநில, மாவட்ட மற்றும் வட்டார நிலைகளில் உருவாக்கிப் பேணிவருதல் வேண்டும்;

(ஆ) தம் உணவு மற்றும் குடிமைப் பொருள் வழங்கும் கழகங்களின் மற்றும் பிற நியமனஞ்செய்யப்பட்ட நிறுவனங்களின் கொள்திறன்களைத் தகுந்தவாறு அதிகரித்தல் வேண்டும்;

10/1955. (இ) அவ்வப்போது திருத்தம் செய்யப்பட்டவாறான, 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட 2001 ஆம் ஆண்டு பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டம் (கட்டாள்கை) ஆணையின் தொடர்புடைய வகையங்களுக்கு ஏற்ப நியாய விலைக் கடைகளுக்காக நிறுவன அமைப்பாக்கப்பட்ட உரிமம் வழங்கும் ஏற்பாடுகளை நிறுவுதல் வேண்டும்.

## அத்தியாயம் X

## உள்ளாட்சி அதிகாரஅமைப்புகளின் கடமைப்பாடுகள்

உள்ளாட்சி அதிகார அமைப்பினால் தம் பகுதிகளில் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டம் செயல் படுத்தப்படுதல்.

**25.** (1) உள்ளாட்சி அதிகாரஅமைப்புகள் தத்தம் பகுதிகளில் இந்தச் சட்டம் முறையாகச் செயல்படுத்தப்படுவதற்குப் பொறுப்புடையன ஆகும்.

(2). (1) ஆம் உட்பிரிவிற்குக் குந்தகமின்றி, மாநில அரசு, அறிவிக்கை வாயிலாக, இலக்குநிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டத்தினை செயல்படுத்துவதற்கான கூடுதல் பொறுப்புகளை உள்ளாட்சி அதிகாரஅமைப்பிற்குக் குறித்தளிக்கலாம்.

உள்ளாட்சி அதிகாரஅமைப்பின் கடமைப்பாடுகள்.

**26.** இந்தச் சட்டத்தின் வகையங்களைச் செயல்படுத்துவதற்கென தயாரிக்கப்பட்ட, மைய அரசு அமைச்சகங்களின் மற்றும் துறைகளின் மற்றும் மாநில அரசுகளின் வெவ்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதில், உள்ளாட்சி அதிகாரஅமைப்புகள், அந்தந்த மாநில அரசுகளால், அறிவிக்கையின் வாயிலாக, தமக்குக் குறித்தளிக்கப்படலாகும் அத்தகைய கடமைகளையும் பொறுப்புகளையும் ஆற்றிவருவதற்குப் பொறுப்புடையனவாகும்.

## அத்தியாயம் XI

## வெளிப்படைநிலையும் பொறுப்புடைமையும்

இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொது பகிர்ந்தளிப்புத் திட்டத்தின் பதிவுருக்களை வெளிப்படுத்துதல்.

**27.** இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டம் தொடர்பான பதிவுருக்கள் அனைத்தும் மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகும் அத்தகைய முறையில், பொது அதிகார எல்லையில் வைக்கப்படுதலும் மற்றும் பொதுமக்கள் பார்வையிடுவதற்காக வெளிப்படையாக வைக்கப்பட்டிருத்தலும் வேண்டும்.

Conduct of social audit.

28. (1) Every local authority, or any other authority or body, as may be authorised by the State Government, shall conduct or cause to be conducted, periodic social audits on the functioning of fair price shops, Targeted Public Distribution System and other welfare schemes, and cause to publicise its findings and take necessary action, in such manner as may be prescribed by the State Government.

(*2*) The Central Government may, if it considers necessary, conduct or cause to be conducted social audit through independent agencies having experience in conduct of such audits.

Setting up of Vigilance Committees.

29. (1) For ensuring transparency and proper functioning of the Targeted Public Distribution System and accountability of the functionaries in such system, every State Government shall set up Vigilance Committees as specified in the Public Distribution System (Control) Order, 2001, made under the Essential Commodities Act, 10 /1955. 1955, as amended from time to time, at the State, District, Block and fair price shop levels consisting of such persons, as may be prescribed by the State Government giving due representation to the local authorities, the Scheduled Castes, the Scheduled Tribes, women and destitute persons or persons with disability.

(2) The Vigilance Committees shall perform the following functions, namely:—

(a) regularly supervise the implementation of all schemes under this Act;

(b) inform the District Grievance Redressal Officer, in writing, of any violation of the provisions of this Act; and

(c) inform the District Grievance Redressal Officer, in writing, of any malpractice or misappropriation of funds found by it.

28. (1) உள்ளாட்சி அதிகாரஅமைப்பு ஒவ்வொன்றும், அல்லது மாநில அரசால் அதிகாரமளிக்கப்படும் பிற அதிகாரஅமைப்பு அல்லது குழுமம் எதுவும், நியாய விலைக் கடைகள், இலக்குநிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டம் மற்றும் பிற நலத் திட்டங்கள் செயல்படுவதன் மீது, மாநில அரசால் வகுத்துரைக்கப்படும் முறையில், காலமுறையாக சமுதாயத் தணிக்கைகள், நடத்தியோ அல்லது நடத்தும்படி செய்தோ, தன் முடிவுகளை வெளியிடச் செய்து, தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். சமுதாயத் தணிக்கை நடத்துதல்.

(2) மைய அரசு, தாம் தேவையெனக் கருதுமாயின், சமுதாயத் தணிக்கைகள் நடத்துவதில் பட்டறிவு உடைய சார்பில்லா நிறுவனங்கள் மூலமாக சமுதாயத் தணிக்கை நடத்தலாம் அல்லது நடத்தும்படிச் செய்யலாம்.

29. (1) இலக்குநிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டம் வெளிப்படையாகவும் முறையாகவும் செயல்படுவதையும் அத்தகைய திட்டத்தில், பதவியாளர்களின் பொறுப்புடைமையையும் உறுதிசெய்வதற்காகவும், அவ்வப்போது திருத்தம் விழிப்புப்பணிக் குழுக்களை அமைத்தல்.
10/1955. செய்யப்பட்டவாறான, 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட 2001 ஆம் ஆண்டு பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டம் (கட்டாளுகை) ஆணையில் குறித்துரைக்கப்பட்டுள்ளவாறு ஒவ்வொரு மாநில அரசும், உள்ளாட்சி அதிகாரஅமைப்புகள், பட்டியலில்கண்ட சாதியினர், பட்டியலில் கண்ட பழங்குடியினர், பெண்கள் மற்றும் ஆதரவற்றோர் அல்லது மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு உரிய சார்பாற்றம் கொடுத்து மாநில, மாவட்ட, வட்டார மற்றும் நியாய விலைக் கடை நிலைகளில் மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகிறவாறு அத்தகைய நபர்களைக் கொண்ட விழிப்புப்பணிக் குழுக்களை அமைத்தல் வேண்டும்.

(2) விழிப்புப்பணிக் குழுக்கள் பின்வரும் செயற்பணிகளைப் புரிதல் வேண்டும், அவையாவன:—

(அ) இந்தச் சட்டத்தின்படியான திட்டங்கள் அனைத்தும் செயல்படுத்தப்படுவதை முறையாக மேற்பார்வையிடுதல் ;

(ஆ) இந்தச் சட்டத்தின் வகையங்களின் மீறுகை எதனையும், எழுத்து வடிவில், மாவட்ட குறை தீர்ப்பு அலுவலருக்குத் தெரிவித்தல்; மற்றும்

(இ) தம்மால் கண்டுபிடிக்கப்பட்ட ஒழுங்கற்ற செயல் அல்லது நிதி கையாடல் எதனையும், எழுத்து வடிவில், மாவட்ட குறை தீர்ப்பு அலுவலருக்குத் தெரிவித்தல்.

## CHAPTER XII

## PROVISIONS FOR ADVANCING FOOD SECURITY

Food security for people living in remote, hilly and tribal areas.

30. The Central Government and the State Governments shall, while implementing the provisions of this Act and the schemes for meeting specified entitlements, give special focus to the needs of the vulnerable groups especially in remote areas and other areas which are difficult to access, hilly and tribal areas for ensuring their food security.

Steps to further advance food and nutritional security.

31. The Central Government, the State Governments and local authorities shall, for the purpose of advancing food and nutritional security, strive to progressively realise the objectives specified in Schedule III.

## CHAPTER XIII

## MISCELLANEOUS

Other welfare schemes.

32. (1) The provisions of this Act shall not preclude the Central Government or the State Government from continuing or formulating other food based welfare schemes.

(*2*) Notwithstanding anything contained in this Act, the State Government may, continue with or formulate food or nutrition based plans or schemes providing for benefits higher than the benefits provided under this Act, from its own resources.

Penalties.

33. Any public servant or authority found guilty, by the State Commission at the time of deciding any complaint or appeal, of failing to provide the relief recommended by the District Grievance Redressal Officer, without reasonable cause, or wilfully ignoring such recommendation, shall be liable to penalty not exceeding five thousand rupees:

Provided that the public servant or the public authority, as the case may be, shall be given a reasonable opportunity of being heard before any penalty is imposed.

## அத்தியாயம் XII

### உணவு பாதுகாப்பினை மேம்படுத்துவதற்கான வகையங்கள்

**30.** மைய அரசும், மாநில அரசுகளும், இந்தச் சட்டத்தின் வகையங்களையும் மற்றும் குறித்துரைக்கப்பட்ட உரிமைப் பயன்களை எய்தப் பெறுவதற்கான திட்டங்களையும் செயல்படுத்துங்கால், பலவீனமான பிரிவினரின், முக்கியமாக நெடுந்தொலைவில் உள்ள பகுதிகளிலும் சென்றடைவதற்குக் கடினமாக இருக்கிற பிற பகுதிகளிலும் மலை மற்றும் பழங்குடியினர் பகுதிகளிலும் உள்ளவர்களின் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காகத் தனிக் கவனம் செலுத்துதல் வேண்டும்.

நெடுந்—தொலைவிலும் மலை மற்றும் பழங்குடியினர் பகுதிகளிலும் வாழ்கின்ற மக்களுக்கான உணவுப் பாதுகாப்பு.

**31.** மைய அரசும், மாநில அரசுகளும் மற்றும் உள்ளாட்சி அதிகாரஅமைப்புகளும், உணவு மற்றும் சத்துணவுப் பாதுகாப்பினை மேம்படுத்தும் நோக்கத்திற்காக, III ஆம் இணைப்புப்பட்டியலில் குறித்துரைக்கப்பட்டுள்ள நோக்கங்களைப் படிப்படியாகச் செயல்வடிவப்படுத்துவதற்கு முயலுதல் வேண்டும்.

உணவு மற்றும் சத்துணவுக்குரிய பாதுகாப்பினை மேலும் மேம் படுத்துவதற்கான நடவடிக்கைகள்.

## அத்தியாயம் XIII

### பல்வகைப்பட்டவை

**32. (1)** இந்தச் சட்டத்தின் வகையங்கள், பிற உணவை அடிப்படையாகக்கொண்ட நலத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்துவதிலிருந்து அல்லது உருவாக்கி முறைப்படுத்துவதிலிருந்து மைய அரசையோ அல்லது மாநில அரசையோ தடை செய்வதாக இருத்தல் ஆகாது.

பிற நலத் திட்டங்கள்.

**(2)** இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், மாநில அரசு, இந்தச் சட்டத்தின்படி வகைசெய்யப்பட்டுள்ள பயன்களை விட உயரிய பயன்களுக்கு வகைசெய்கிற உணவை அல்லது சத்துணவை அடிப்படையாகக் கொண்ட திட்டங்களை அல்லது செயல்திட்டங்களை, தம் சொந்த வருவாய் ஆதாரங்களிலிருந்து, தொடர்ந்து செயல்படுத்தலாம் அல்லது உருவாக்கி முறைப்படுத்தலாம்.

**33.** தகுமான காரணமின்றி, மாவட்ட குறை தீர்ப்பு அலுவலரால் பரிந்துரை செய்யப்பட்ட தீருதவியை வழங்க தவறுதல் அல்லது அத்தகைய பரிந்துரையை வேண்டுமென்றே புறக்கணித்தல் பற்றிய, முறையீடு அல்லது மேல்முறையீடு எதனையும் முடிவு செய்யும் சமயத்தில் மாநில ஆணையத்தால், குற்றஞ்செய்தவர் என கண்டறியப்பட்ட பொதுப் பணியாளர் எவரும் அல்லது பொது அதிகாரஅமைப்பு எதுவும், ஐயாயிரம் ரூபாய்க்கு மேற்படாத தண்டத்திற்கு உள்ளாதல் வேண்டும்:

தண்டனைகள்.

**வரம்புரையாக:** பொதுப் பணியாளரோ அல்லது, நேர்வுக்கேற்ப, பொது அதிகாரஅமைப்போ, தண்டம் எதுவும் விதிக்கப்படுவதற்கு முன்பு, விசாரணை செய்யும்போது தகுமான வாய்ப்பு ஒன்று அவருக்கு நல்கப்படுதல் வேண்டும்.

Power to adjudicate.

34. (1) For the purpose of adjudging penalty under section 33, the State Commission shall authorise any of its member to be an adjudicating officer for holding an inquiry in the prescribed manner after giving any person concerned a reasonable opportunity of being heard for the purpose of imposing any penalty.

(*2*) While holding an inquiry the adjudicating officer shall have power to summon and enforce the attendance of any person acquainted with the facts and circumstances of the case to give evidence or to produce any document which in the opinion of the adjudicating officer, may be useful for or relevant to the subject matter of the inquiry and if, on such inquiry, he is satisfied that the person has failed to provide the relief recommended by the District Grievance Redressal Officer, without reasonable cause, or wilfully ignored such recommendation, he may impose such penalty as he thinks fit in accordance with the provisions of section 33.

Power to delegate by Central Government and State Government.

35. (1) The Central Government may, by notification, direct that the powers exercisable by it (except the power to make rules), in such circumstances and subject to such conditions and limitations, be exercisable also by the State Government or an officer subordinate to the Central Government or the State Government as it may specify in the notification.

(2) The State Government may, by notification, direct that the powers exercisable by it (except the power to make rules), in such circumstances and subject to such conditions and limitations, be exercisable also by an officer subordinate to it as it may specify in the notification.

Act to have overriding effect.

36. The provisions of this Act or the schemes made thereunder shall have effect notwithstanding anything inconsistent therewith contained in any other law for the time being in force or in any instrument having effect by virtue of such law.

**34. (1)** 33 ஆம் பிரிவின்படி தண்டனைத் தீர்ப்பளிக்கும் நோக்கத்திற்காக, மாநில ஆணையம், தண்டனை எதுவும் விதிக்கும் நோக்கத்திற்காக தொடர்புடைய நபர் எவருக்கும் தகுமான வாய்ப்பு ஒன்றினை நல்கிய பின்பு, வகுத்துரைக்கப்பட்ட முறையில் விசாரணை ஒன்றை நடத்துவதற்காகத் தம் உறுப்பினர்களில் எவரையும் நீதிமுறையில் தீர்வு செய்யும் அலுவலராக இருக்குமாறு அதிகாரம் அளித்தல் வேண்டும்.

தீர்ப்பளிப்பதற்கான அதிகாரம்.

(2) விசாரணை ஒன்றை நடத்துங்கால் நீதிமுறையில் தீர்வுசெய்யும் அலுவலர், விசாரணையின் உறுபொருளுக்குப் பயனுடையதாகவோ தொடர்புடையதாகவோ இருக்கலாம் என கருதும் சான்றினை அளிப்பதற்கு அல்லது ஆவணம் எதனையும் முன்னிடுவதற்கு, வழக்கின் பொருண்மைகளையும் சூழ்நிலைகளையும் அறிந்த ஒருவருக்கு அழைப்பாணை விடுத்து அவர் முன்னிலையாவதைக் கட்டாயப்படுத்துவதற்கு நீதிமுறையில் தீர்வுசெய்யும் அலுவலர் அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும் மற்றும், அத்தகைய விசாரணையின் பேரில், அந்த நபர், தகுமான காரணமின்றி மாவட்ட குறை தீர்ப்பு அலுவலரால் பரிந்துரைசெய்யப்பட்ட தீருதவியை வழங்கத் தவறியிருக்கிறார் என்றோ அல்லது அத்தகைய பரிந்துரையை வேண்டுமென்றே புறக்கணித்திருக்கிறார் என்றோ தெளிவுறக்காண்பாராயின், அவர் 33 ஆம் பிரிவின் வகையங்களுக்கு இணங்க தான் பொருத்தமெனக் கருதலாகும் அத்தகைய தண்டனையை விதிக்கலாம்.

**35. (1)** மைய அரசு, அறிவிக்கையின் வாயிலாக, தம்மால் செலுத்தத்தக்க (விதிகள் செய்வதற்கான அதிகாரம் நீங்கலான) அதிகாரங்கள் அது, அறிவிக்கையில் குறித்துரைக்கலாகிறவாறு அத்தகைய சூழ்நிலைகளிலும் மற்றும் அத்தகைய வரைக்கட்டுகளுக்கும் வரம்புகளுக்கும் உட்பட்டும், மாநில அரசாலோ அல்லது மைய அரசுக்கு அல்லது மாநில அரசுக்குக் கீழமைந்துள்ள அலுவலர் ஒருவராலோ கூட செலுத்தப்படத்தக்கதாகும் என்று பணிக்கலாம்.

மைய அரசாலும் மாநில அரசாலும் ஒப்படைவு செய்வதற்கான அதிகாரம்.

(2) மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாக, தம்மால் செலுத்தத்தக்க (விதிகள் வகுப்பதற்கான அதிகாரம் நீங்கலான) அதிகாரங்கள் அது, அறிவிக்கையில் குறித்துரைக்கலாகிறவாறு அத்தகைய சூழ்நிலைகளிலும் மற்றும் அத்தகைய வரைக்கட்டுகளுக்கும் வரம்புகளுக்கும் உட்பட்டும், தமக்குக் கீழமைந்துள்ள அலுவலர் ஒருவராலும் கூட செலுத்தப்படத்தக்கதாகும் என்று பணிக்கலாம்.

**36.** இந்தச் சட்டத்தின் வகையங்களோ அல்லது அதன்படி வகுக்கப்பட்ட திட்டங்களோ அப்போதைக்குச் செல்லாற்றலிலுள்ள பிற சட்டம் எதிலும் அல்லது அத்தகைய சட்டத்தின் பயன்திறன்வழி செல்திறம் கொண்டுள்ள முறையாவணம் எதிலும் அதற்கு முரணாக அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், செல்திறம் உடையதாகும்.

சட்டம் மீதூர்ந்தியங்கும் செல்திறமுடையது.

Power to amend Schedules.

37. (1) If the Central Government is satisfied that it is necessary or expedient so to do, it may, by notification, amend Schedule I or Schedule II or Schedule III or Schedule IV and thereupon Schedule I or Schedule II or Schedule III or Schedule IV, as the case may be, shall be deemed to have been amended accordingly.

(*2*) A copy of every notification issued under sub-section (1), shall be laid before each House of Parliament as soon as may be after it is issued.

Power of Central Government to give directions.

38. The Central Government may, from time to time, give such directions, as it may consider necessary, to the State Governments for the effective implementation of the provisions of this Act and the State Governments shall comply with such directions.

Power of Central Government to make rules.

39. (1) The Central Government may, in consultation with the State Governments and by notification, make rules to carry out the provisions of this Act.

(2) In particular, and without prejudice to the generality of the foregoing power, such rules may provide for all or any of the following matters, namely:

(a) scheme including cost sharing for providing maternity benefit to pregnant women and lactating mothers under clause (b) of section 4;

(b) schemes covering entitlements under sections 4, 5 and section 6 including cost sharing under section 7;

(c) amount, time and manner of payment of food security allowance to entitled individuals under section 8;

(d) introducing schemes of cash transfer, food coupons or other schemes to the targeted beneficiaries in order to ensure their foodgrains entitlements in such areas and manner under clause (h) of sub-section (*2*) of section 12;

இணைப்புப்– பட்டியல்களைத் திருத்தம் செய்வதற்கான அதிகாரம்.

**37.** (1) மைய அரசு, அவ்வாறு செய்வது தேவையென அல்லது உகந்ததெனத் தெளிவுறக்காணுமாயின், அது, அறிவிக்கையின் வாயிலாக, I ஆம் இணைப்புப்பட்டியலை அல்லது II ஆம் இணைப்புப்பட்டியலை அல்லது III ஆம் இணைப்புப்பட்டியலை அல்லது IV ஆம் இணைப்புப்பட்டியலைத் திருத்தம் செய்யலாம் மற்றும் அதன் பேரில், நேர்வுக்கேற்ப, I ஆம் இணைப்புப்பட்டியல் அல்லது II ஆம் இணைப்புப்பட்டியல் அல்லது III ஆம் இணைப்புப்பட்டியல் அல்லது IVஆம் இணைப்புப்பட்டியல் அதன்படியே திருத்தம் செய்யப்பட்டிருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2). (1) ஆம் உட்பிரிவின்படி வெளியிடப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றின் படி ஒன்று, அது வெளியிடப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

பணிப்புரைகள் வழங்குவதற்கு மைய அரசுக்குள்ள அதிகாரம்.

**38.** மைய அரசு, இந்தச் சட்டத்தின் வகையங்கள் திறம்படச் செயல்படுத்தப்படுவதற்காக, அவ்வப்போது, மாநில அரசுகளுக்குத் தாம் தேவையெனக் கருதலாகும் அத்தகைய பணிப்புரைகளை வழங்கலாம் மற்றும் மாநில அரசுகள் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கி நடத்தல் வேண்டும்.

விதிகளைச் செய்வதற்கு மைய அரசுக்குள்ள அதிகாரம்.

**39.** (1) மைய அரசு, மாநில அரசுகளுடன் கலந்தாய்வு செய்த பின்பு மற்றும் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாகவும், மேலே கண்ட அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகைசெய்யலாம், அவையாவன:–

(அ) 4 ஆம் பிரிவின் (ஆ) கூறின்படி கருவுற்றுள்ள பெண்களுக்கும் பால் கொடுக்கும் தாய்களுக்கும் பேறுகாலநலப் பயன் வழங்குவதற்கான செலவடைப் பங்கீடு உள்ளடங்கலான திட்டம்;

(ஆ) 7 ஆம் பிரிவின்படி செலவடைப் பங்கீடு உள்ளடங்கலான 4 ஆம், 5 ஆம் பிரிவுகளின்படியும் மற்றும் 6 ஆம் பிரிவின்படியும் உரிமைப்பயன்களை உள்ளடக்கிய திட்டங்கள்;

(இ) 8 ஆம் பிரிவின்படி உரிமைகொண்ட தனி மனிதர்களுக்கு உணவுப் பாதுகாப்புப் படித்தொகை வழங்கும் பணத்தொகை, நேரம் மற்றும் முறை;

(ஈ) 12 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் (ஏ) கூறின்படி இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பயனாளிகளுக்கு அத்தகைய பகுதிகளில் மற்றும் முறையில் அவர்களுடைய உணவு தானியங்களுக்கான உரிமைப்பயன்களை, உறுதி செய்யும் பொருட்டு பண மாற்றம், உணவு சலுகைச்சீட்டுகள் திட்டங்களை அல்லது பிற திட்டங்களை அறிமுகப்படுத்துதல்;

(e) the norms and manner of providing assistance to the State Governments in meeting expenditure under clause (d) of sub-section (4) of section 22;

(f) manner in which funds shall be provided by the Central Government to the State Governments in case of short supply of foodgrains, under section 23;

(g) any other matter which is to be, or may be, prescribed or in respect of which provision is to be made by the Central Government by rules.

(3) Every rule made by the Central Government under this Act shall be laid, as soon as may be after it is made, before each House of Parliament, while it is in session, for a total period of thirty days which may be comprised in one session or in two or more successive sessions, and if, before the expiry of the session immediately following the session or the successive sessions aforesaid, both Houses agree in making any modification in the rule or both Houses agree that the rule should not be made, the rule shall thereafter have effect only in such modified form or be of no effect, as the case may be; so, however, that any such modification or annulment shall be without prejudice to the validity of anything previously done under that rule.

Power of State Government to make rules.

40. (1) The State Government may, by notification, and subject to the condition of previous publication, and consistent with this Act and the rules made by the Central Government, make rules to carry out the provisions of this Act.

(2) In particular and without prejudice to the generality of the foregoing power, such rules may provide for all or any of the following matters, namely:

(a) guidelines for identification of priority households under sub-section (1) of section 10;

(b) internal grievance redressal mechanism under section 14;

(c) qualifications for appointment as District Grievance Redressal Officer and its powers under sub-section (*2*) of section 15;

(உ) 22 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் (ஈ) கூறின்படி செலவினங்களை எதிர்கொள்வதில் மாநில அரசுகளுக்கு உதவி வழங்கும் நெறிகள் மற்றும் முறை;

(ஊ) 23 ஆம் பிரிவின்படி, உணவு தானியங்களைக் குறைவாக வழங்கும் நேர்வில், மாநில அரசுகளுக்கு மைய அரசால் எந்த முறையில் நிதிகள் வகைசெய்யப்படவேண்டுமோ அந்த முறை;

(எ) வகுத்துரைக்கப்பட வேண்டிய அல்லது வகுத்துரைக்கப்படலாகும், அல்லது எந்தப் பிற பொருட்பாடுகள் பொறுத்து மைய அரசால், விதிகள் வாயிலாக, வகையம் செய்யப்படவேண்டுமோ, அந்தப் பிற பொருட்பாடு எதுவும்.

(3) மைய அரசால் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி ஒவ்வொன்றும், அது செய்யப்பட்ட பின்பு, கூடிய விரைவில் நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், அது, முப்பது நாட்களைக் கொண்ட ஒரு மொத்தக் காலஅளவிற்கு ஒரு கூட்டத்தொடராகவோ இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்த கூட்டத்தொடர்களாகவோ அமர்வில் இருக்கையில், அதன் முன் வைக்கப்படுதல் வேண்டும்; மேலும், மேற்சொன்ன கூட்டத்தொடரை அல்லது அடுத்தடுத்த கூட்டத்தொடர்களைத் தொடர்ந்து வரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அந்த விதியில் மாற்றமைவு எதனையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அல்லது அந்த விதி செய்யப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன்பின்பு, அந்த விதி அவ்வாறு மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும்; அல்லது, நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாது போகும்; எனினும் அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும் அந்த விதியின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனுடைய செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.

விதிகளைச் செய்வதற்கு மாநில அரசுக்குள்ள அதிகாரம்.

40. (1) மாநில அரசு, அறிவிக்கையின் வாயிலாக, மற்றும் முந்தைய வெளியீட்டின் வரைக்கட்டிற்கு உட்பட்டு, மற்றும் இந்தச் சட்டத்திற்கும் மைய அரசால் செய்யப்பட்ட விதிகளுக்கும் ஒவ்வும் வகையிலும், இந்தச் சட்டத்தின் வகையங்களை நிறைவேற்றுவதற்கு விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாகவும், மேலே கண்ட அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்கும் அல்லது அவற்றில் எதற்கும் வகைசெய்யலாம் அவையாவன:—

(அ) 10 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி முன்னுரிமை குடும்பத்தினரைக் கண்டறிவதற்கான வழிகாட்டுநெறிமுறைகள்;

(ஆ) 14 ஆம் பிரிவின்படி உள் குறை தீர்ப்பு இயக்கமுறை;

(இ) 15 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்படி மாவட்ட குறை தீர்ப்பு அலுவலராகப் பதவியமர்த்தத்திற்கான தகுதிப்பாடுகள் மற்றும் அதன் அதிகாரங்கள்;

(d) method and terms and conditions of appointment of the District Grievance Redressal Officer under sub-section (*3*) of section 15;

(e) manner and time limit for hearing complaints by the District Grievance Redressal Officer and the filing of appeals under sub-sections (*5*) and (*7*) of section 15;

(f) method of appointment and the terms and conditions of appointment of Chairperson, other Members and Member-Secretary of the State Commission, procedure for meetings of the Commission and its powers, under sub-section (*5*) of section 16;

(g) method of appointment of staff of the State Commission, their salaries, allowances and conditions of service under sub-section (*8*) of section 16;

(h) manner in which the Targeted Public Distribution System related records shall be placed in the public domain and kept open for inspection to public under section 27;

(i) manner in which the social audit on the functioning of fair price shops, Targeted Public Distribution System and other welfare schemes shall be conducted under section 28;

(j) composition of Vigilance Committees under sub-section (1) of section 29;

(k) schemes or programmes of the Central Government or the State Governments for utilisation of institutional mechanism under section 43;

(l) any other matter which is to be, or may be, prescribed or in respect of which provision is to be made by the State Government by rules.

(3) Every rule, notification and guidelines made or issued by the State Government under this Act shall, as soon as may be after it is made or issued, be laid before each House of the State Legislature where there are two Houses, and where there is one House of the State Legislature, before that House.

(ஈ) 15 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின்படி மாவட்ட குறை தீர்ப்பு அலுவலர் பதவியமர்த்தத்திற்கான முறை மற்றும் வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகள்;

(உ) 15 ஆம் பிரிவின், (5) ஆம் மற்றும் (7) ஆம் உட்பிரிவுகளின்படி மாவட்ட குறை தீர்ப்பு அலுவலரால் முறையீடுகளை விசாரிப்பதற்கான மற்றும் மேல்முறையீடுகளை முன்னிடுவதற்கான முறை மற்றும் காலவரம்பு;

(ஊ) 16 ஆம் பிரிவின் 5 ஆம் உட்பிரிவின்படி, மாநில ஆணையத்தின் தலைமையர், பிற உறுப்பினர்கள் மற்றும் உறுப்பினர்–செயலர் ஆகியோரைப் பதவியமர்த்துவதற்கான முறை மற்றும் பதவியமர்த்தத்திற்கான வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகள், ஆணையத்தின் கூட்டங்களுக்கான நெறிமுறை மற்றும் அதன் அதிகாரங்கள்;

(எ) 16 ஆம் பிரிவின் (8) ஆம் உட்பிரிவின்படி மாநில ஆணையத்தின் பணியாளர் தொகுதியினரை பணியமர்த்துவதற்கான முறை, அவர்களுக்கான வரையூதியங்கள், படித்தொகைகள் மற்றும் பணி வரைக்கட்டுகள்;

(ஏ) 27 ஆம் பிரிவின்படி எந்த முறையில் இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டத்தின் தொடர்பான பதிவுருக்கள் பொது அதிகாரயெல்லையில் வைக்கப்பட்டு பொதுமக்கள் பார்வையிடுவதற்காக வெளிப்படையாக வைக்கப்படுதல் வேண்டுமோ அந்த முறை;

(ஐ) 28 ஆம் பிரிவின்படி நியாய விலைக் கடைகள், இலக்கு நிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டம் மற்றும் பிற நலத் திட்டங்கள் செயல்படுவதன் மீது எந்த முறையில் சமுதாயத் தணிக்கை செய்யப்படவேண்டுமோ அந்த முறை;

(ஒ) 29 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின்படி விழிப்புப்பணிக் குழுக்களின் கட்டமைப்பு;

(ஓ) 43 ஆம் பிரிவின்படி நிறுவன அமைப்பிலான இயக்கமுறையைப் பயன்படுத்துவதற்காக மைய அரசின் அல்லது மாநில அரசுகளின் திட்டங்கள் அல்லது செயல்முறைத் திட்டங்கள்;

(ஔ) வகுத்துரைக்கப்படவேண்டிய அல்லது வகுத்துரைக்கப்படலாகும், பிற பொருட்பாடு எதுவும் அல்லது எந்தப் பிற பொருட்பாடு பொறுத்து மாநில அரசால் வகையம் செய்யப்படவேண்டுமோ, அந்தப் பிற பொருட்பாடு.

(3) இந்தச் சட்டத்தின்படி மாநில அரசால் செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதி, அறிவிக்கை, வழிகாட்டு நெறிமுறைகள் ஒவ்வொன்றும் அது செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு கூடிய விரைவில், மாநில சட்டமன்றத்தில், இரண்டு அவைகள் இருக்குமிடத்து அந்தச் சட்டமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் மற்றும் ஓர் அவையாக இருக்குமிடத்து, அந்த மாநில சட்டமன்ற அவையின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்.

Transitory provisions for schemes, guidelines, etc.

41. The schemes, guidelines, orders and food standard, grievance redressal mechanism, vigilance committees, existing on the date of commencement of this Act, shall continue to be in force and operate till such schemes, guidelines, orders and food standard, grievance redressal mechanism, vigilance committees are specified or notified under this Act or the rules made thereunder:

Provided that anything done or any action taken under the said schemes, guidelines, orders and food standard, grievance redressal mechanism, or by vigilance committees shall be deemed to have been done or taken under the corresponding provisions of this Act and shall continue to be in force accordingly unless and until superseded by anything done or by any action taken under this Act.

Power to remove difficulties.

42. (1) If any difficulty arises in giving effect to the provisions of this Act, the Central Government may, by order, published in the Official Gazette, make such provisions, not inconsistent with the provisions of this Act, as appear to it to be necessary or expedient for removing the difficulty:

Provided that no order shall be made under this section after the expiry of two years from the date of commencement of this Act.

(*2*) Every order made under this section shall be laid, as soon as may be after it is made, before each House of Parliament.

Utilisation of institutional mechanism for other purposes.

43. The services of authorities to be appointed or constituted under sections 15 and 16 may be utilised in the implementation of other schemes or programmes of the Central Government or the State Governments, as may be prescribed by the State Government.

*Force Majeure.*

44. The Central Government, or as the case may be, the State Government, shall be liable for a claim by any person entitled under this Act, except in the case of war, flood, drought, fire, cyclone or earthquake affecting the regular supply of foodgrains or meals to such person under this Act:

**41.** இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியன்று நிலவிவரும் திட்டங்கள், வழிகாட்டுநெறிமுறைகள், ஆணைகள் மற்றும் உணவு அளவு, குறை தீர்ப்பு இயக்கமுறை, விழிப்புப்பணி குழுக்கள், அத்தகைய திட்டங்கள், வழிகாட்டுநெறிமுறைகள், ஆணைகள், மற்றும் உணவு அளவு, குறை தீர்ப்பு இயக்கமுறை, விழிப்புப்பணிக் குழுக்கள் ஆகியவை இந்தச் சட்டத்தின்படியோ அதன்படி செய்யப்பட்ட விதிகளின்படியோ குறித்துரைக்கப்படுகிற அல்லது அறிவிக்கை செய்யப்படுகிற வரையில் தொடர்ந்து செல்லாற்றலிலும் செயல்பாட்டிலும் இருத்தல் வேண்டும்: திட்டங்கள், வழிகாட்டு நெறிமுறைகள் முதலானவற்றிற் கான மாறுதற்கால வகையங்கள்.

**வரம்புரையாக:–** மேற்சொன்ன திட்டங்கள், வழிகாட்டு நெறிமுறைகள், ஆணைகள் மற்றும் உணவு அளவு, குறை தீர்ப்பு இயக்கமுறை ஆகியவற்றின்படியோ அல்லது விழிப்புப்பணிக் குழுக்களினாலோ செய்யப்பட்ட எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் இந்தச் சட்டத்தின் நேரிணையான வகையங்களின்படி செய்யப்பட்டிருப்பதாகவோ அல்லது எடுக்கப்பட்டிருப்பதாகவோ கொள்ளப்படுதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட எதனாலும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனாலும் நீக்கி இடங்கொண்டாலன்றியும் நீக்கி இடங்கொள்ளப்படும் வரையிலும் அதன்படியே தொடர்ந்து செல்லாற்றலில் இருந்து வருதல் வேண்டும்.

**42. (1)** இந்தச் சட்டத்தின் வகையங்களுக்குச் செல்திறம் கொடுப்பதில் இடர்ப்பாடு எதுவும் எழுமாயின், மைய அரசு, அதிகாரமுறை அரசிதழில் வெளியிடப்படும், ஆணை வாயிலாக, அந்த இடர்ப்பாட்டினை அகற்றுவதற்குத் தேவையானது அல்லது உகந்தது என தமக்குத் தோன்றுகிற இந்தச் சட்டத்தின் வகையங்களுக்கு முரணாக இராத, அத்தகைய வகையங்களைச் செய்யலாம்: இடர்ப்பாடுகளை அகற்றுவதற்கான அதிகாரம்.

**வரம்புரையாக:–** இந்தப் பிரிவின்படி ஆணை எதுவும், இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் கழிவுற்ற பின்பு பிறப்பிக்கப்படுதல் ஆகாது.

**(2)** இந்தச் சட்டத்தின்படி பிறப்பிக்கப்பட்ட ஆணை ஒவ்வொன்றும், அது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றின் முன்பும் வைக்கப்படுதல் வேண்டும்.

**43. 15** ஆம் மற்றும் **16** ஆம் பிரிவுகளின்படி பதவியமர்த்தப்படவோ அல்லது அமைக்கப்படவோ வேண்டிய அதிகாரஅமைப்புகளின் பணிகள் மாநில அரசால் வகுத்துரைக்கப்படலாகிறவாறு, மையஅரசின் அல்லது மாநில அரசுகளின் பிற திட்டங்களை அல்லது செயல்முறைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் பயன்படுத்தப்படலாம். பிற நோக்கங்–களுக்காக நிறுவன அமைப்பிலான இயக்கமுறையைப் பயன்படுத்துதல்.

**44.** இந்தச் சட்டத்தின்படி உரிமைகொண்ட ஒருவரால் செய்யப்படும் கோரிக்கை ஒன்றுக்கு, இந்தச் சட்டத்தின்படி அத்தகைய நபருக்கு உணவு தானியங்களோ அல்லது உணவுகளோ காலமுறையாக வழங்குவதைப் பாதிக்கிற போர், வெள்ளப்பெருக்கு, வறட்சி, தீ, புயல் அல்லது நில அதிர்ச்சி நிகழ்வுகளில் தவிர மைய அரசு, அல்லது, நேர்வுக்கேற்ப, மாநில அரசு கடப்பாடுடையதாகும்: இக்கட்டான நிலைமை.

Provided that the Central Government may, in consultation with the Planning Commission, declare whether or not any such situation affecting the regular supply of foodgrains or meals to such person has arisen or exists.

Repeal and savings.

45. (1) The National Food Security Ordinance, 2013 is hereby repealed. Ord. 7 of 2013.

(2) Notwithstanding such repeal, -

(a) anything done, any action taken or any identification of eligible households made; or

(b) any right, entitlement, privilege, obligation or liability acquired, accrued or incurred; or

(c) any guidelines framed or directions issued; or

(d) any investigation, inquiry or any other legal proceeding initiated, conducted or continued in respect of such right, entitlement, privilege, obligation or liability as aforesaid; or

(e) any penalty imposed in respect of any offence,

under the said Ordinance shall be deemed to have been done, taken, made, acquired, accrued, incurred, framed, issued, initiated, conducted, continued or imposed under the corresponding provisions of this Act.

**வரம்புரையாக:** மைய அரசு, திட்ட ஆணையத்துடன் கலந்தாய்வு செய்த பின்பு, அத்தகைய நபருக்கு உணவு தானியங்களோ அல்லது உணவுகளோ காலமுறையாக வழங்குவதைப் பாதிக்கிற அத்தகைய நிலைமை எழுந்துள்ளதா அல்லது நிலவுகிறதா இல்லையா என்பதை விளம்புகை செய்யலாம்.

அவசரச் சட்டம் 7/2013.

நீக்கறவும் காப்புரைகளும்.

**45. (1) 2013** ஆம் ஆண்டு தேசிய உணவுப் பாதுகாப்பு அவசரச்சட்டம் ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது.

(2) அத்தகைய நீக்கறவு இருந்தபோதிலும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தின்படி,–

(அ) செய்யப்பட்ட எதுவும், அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும் அல்லது தகுமையுடைய குடும்பத்தினர் என்று கண்டறியப்பட்ட எதுவும்; அல்லது

(ஆ) பெறப்பட்ட, சேர்ந்தடைந்த அல்லது மேற்கொள்ளப்பட்ட உரிமை, உரிமைப்பயன், மதிப்புரிமை, கடமைப்பாடு அல்லது கடப்பாடு எதுவும்; அல்லது

(இ) உருவாக்கப்பட்ட வழிகாட்டுநெறிமுறைகள் அல்லது வழங்கப்பட்ட பணிப்புரைகள் எவையும்; அல்லது

(ஈ) மேலே கண்ட அத்தகைய உரிமை, உரிமைப்பயன், மதிப்புரிமை, கடமைப்பாடு அல்லது கடப்பாடு பொறுத்து தொடங்கப்பட்ட, நடத்தப்பட்ட அல்லது தொடர்ந்து நடத்தப்பட்ட புலனாய்வு, விசாரணை எதுவும் அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும்; அல்லது

(உ) குற்றச்செயல் எதனையும் பொறுத்து விதிக்கப்பட்ட தண்டனை எதுவும்,

இந்தச் சட்டத்தின் நேரிணையான வகையங்களின்படி செய்யப்பட்டு, எடுக்கப்பட்டு, வகுக்கப்பட்டு, பெறப்பட்டு, சேர்ந்தடைந்து, மேற்கொள்ளப்பட்டு, உருவாக்கப்பட்டு, வெளியிடப்பட்டு, தொடங்கப்பட்டு, நடத்தப்பட்டு, தொடர்ந்து நடத்தப்பட்டு அல்லது விதிக்கப்பட்டு இருப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

## SCHEDULE I

[*See* sections 3(1), 22(1), (*3*) and 24(*2*), (*3*)]

## SUBSIDISED PRICES UNDER TARGETED PUBLIC DISTRIBUTION SYSTEM

Eligible households shall be entitled to foodgrains under section 3 at the subsidised price not exceeding rupees 3 per kg for rice, rupees 2 per kg for wheat and rupee 1 per kg for coarse grains for a period of three years from the date of commencement of this Act; and thereafter, at such price, as may be fixed by the Central Government, from time to time, not exceeding,

(i) the minimum support price for wheat and coarse grains; and

(ii) the derived minimum support price for rice,

as the case may be.

## இணைப்புப்பட்டியல் I

[3(1), 22(1), (3) மற்றும் 24(2), (3) ஆகிய பிரிவுகளைக் காண்க]

## இலக்குநிர்ணயிக்கப்பட்ட பொதுப் பகிர்ந்தளிப்புத் திட்டத்தின்படியான மானியவிலைகள்

இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து மூன்றாண்டு காலஅளவு ஒன்றிற்கு தகுமையுடைய குடும்பத்தினர், 3 ஆம் பிரிவின்படி அரிசிக்கு ஒரு கிலோ 3 ரூபாய்க்கும், கோதுமைக்கு ஒரு கிலோ 2 ரூபாய்க்கும் மற்றும் பருவெட்டான தானியங்களுக்கு ஒரு கிலோ 1 ரூபாய்க்கும் மேற்படாத மானிய விலையிலும் மற்றும் அதற்குப் பின்பு,—

(i) கோதுமைக்கும் பருவெட்டான தானியங்களுக்கும் குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு; மற்றும், நேர்வுக்கேற்ப,

(ii) அரிசிக்காகப் பெறப்பட்ட குறைந்தபட்ச ஆதரவு விலைக்கு,

மேற்படாமல் அவ்வப்போது மைய அரசால் நிர்ணயம் செய்யப்படலாகிறவாறு அத்தகைய விலையிலும் உணவு தானியங்கள் பெறுவதற்கு உரிமைகொண்டவராவர்.

## SCHEDULE II

[*See* sections 4(*a*), 5(1) and 6]

## NUTRITIONAL STANDARDS

*Nutritional standards:* The nutritional standards for children in the age group of 6 months to 3 years, age group of 3 to 6 years and pregnant women and lactating mothers required to be met by providing "Take Home Rations" or nutritious hot cooked meal in accordance with the Integrated Child Development Services Scheme and nutritional standards for children in lower and upper primary classes under the Mid Day Meal Scheme are as follows:

| **Serial number** | **Category** | **Type of meal** | **Calories (Kcal)** | **Protein (g)** |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | Children (6 months to 3 years) | Take Home Ration | 500 | 12-15 |
| 2. | Children (3 to 6 years) | Morning Snack and Hot Cooked Meal | 500 | 12-15 |
| 3. | Children (6 months to 6 years) who are malnourished | Take Home Ration | 800 | 20-25 |

## இணைப்புப்பட்டியல் II

[4(அ), 5(1) மற்றும் 6 ஆகிய பிரிவுகளைக் காண்க]

### சத்துணவின் தரநிலைகள்

**சத்துணவின் தரநிலைகள்:** ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்திற்கு ஏற்ப 6 மாதங்களிலிருந்து 3 ஆண்டுகள் வரையிலான வயதுப் பிரிவில் உள்ள, 3–லிருந்து 6 ஆண்டுகள் வரையிலான வயதுப்பிரிவில் உள்ள சிறார்களுக்கும் மற்றும் கருவுற்றுள்ளப் பெண்களுக்கும், பால்கொடுக்கும் தாய்களுக்கும், ''வீட்டிற்கு எடுத்துச்செல்லும் பங்கீடுகள்'' அல்லது சத்துணவுச் சூடாக சமைக்கப்பட்ட உணவுக்கு வகைசெய்து நிறைவுசெய்யப்படுவதற்குத் தேவைப்படும் சத்துணவின் தரநிலைகளும் மற்றும் நண்பகல் உணவுத் திட்டத்தின்படி கீழ் நிலை மற்றும் மேல் நிலை தொடக்க வகுப்புகளில் உள்ள சிறார்களுக்கான சத்துணவின் தரநிலைகளும் பின்வருவனவாகும்:–

| வரிசை எண் | வகை | உணவின் வகை | கலோரிகள் (கிக) | புரதச்சத்து (கிராம்) |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. | சிறார்கள் (6 மாதங்கள் முதல் 3 ஆண்டுகள் வரை) | வீட்டிற்கு எடுத்துச் செல்லும் பங்கீடு | 500 | 12–15 |
| 2. | சிறார்கள் (3 முதல் 6 ஆண்டுகள் வரை) | காலை சிற்றிடையுணவு மற்றும் சூடாக சமைக்கப்பட்ட உணவு. | 500 | 12–15 |
| 3. | சத்துக் குறைவாக உள்ள உணவை கொள்ளும் (6 மாதங்கள் முதல் 6 ஆண்டுகள் வரையிலான) சிறார்கள். | வீட்டிற்கு எடுத்துச் செல்லும் பங்கீடு | 800 | 20–25 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | Lower primary classes | Hot Cooked Meal | 450 | 12 |
| 5. | Upper primary classes | Hot Cooked Meal | 700 | 20 |
| 6. | Pregnant women and Lactating mothers | Take Home Ration | 600 | 18-20 |

| | | | | |
|---|---|---|---|---|
| 4. | கீழ்நிலை தொடக்க வகுப்புகள் | சூடாக சமைக்கப்பட்ட உணவு | 450 | 12 |
| 5. | மேல்நிலை தொடக்க வகுப்புகள் | சூடாக சமைக்கப்பட்ட உணவு | 700 | 20 |
| 6. | கருவுற்றுள்ள பெண்கள் மற்றும் பால் கொடுக்கும் தாய்கள் | வீட்டிற்கு எடுத்துச் செல்லும் பங்கீடு | 600 | 18–20 |

## SCHEDULE III

(*See* section 31)

## PROVISIONS FOR ADVANCING FOOD SECURITY

(1) Revitalisation of Agriculture—

(a) agrarian reforms through measures for securing interests of small and marginal farmers;

(b) increase in investments in agriculture, including research and development, extension services, micro and minor irrigation and power to increase productivity and production;

(c) ensuring livelihood security to farmers by way of remunerative prices, access to inputs, credit, irrigation, power, crop insurance, etc.;

(d) prohibiting unwarranted diversion of land and water from food production.

(2) Procurement, Storage and Movement related interventions—

(a) incentivising decentralised procurement including procurement of coarse grains;

(b) geographical diversification of procurement operations;

(c)augmentation of adequate decentralised modern and scientific storage;

(d) giving top priority to movement of foodgrains and providing sufficient number of rakes for this purpose, including expanding the line capacity of railways to facilitate foodgrain movement from surplus to consuming regions.

(3) Others: Access to —

(a) safe and adequate drinking water and sanitation;

(b) health care;

## இணைப்புப்பட்டியல் III

**(31 ஆம் பிரிவைக் காண்க)**

### உணவுப் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான வகையங்கள்

(1) வேளாண்மைக்குப் புத்துயிர் கொடுத்தல்:–

(அ) சிறு மற்றும் மிகச்சிறு அளவிலான உழவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளின் மூலமாக வேளாண்மைச் சீர்திருத்தங்கள்;

(ஆ) ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி விரிவாக்கப் பணிகள், குறு மற்றும் சிறிய நீர்ப்பாசனம் மற்றும் உற்பத்தித் திறனையும் உற்பத்தியையும் அதிகரிப்பதற்கான ஆற்றல் உள்ளடங்கலாக வேளாண்மையில் முதலீடுகளை அதிகரித்தல்;

(இ) ஆதாயமுள்ள விலைகள், உள்ளீடுகள், கடன், நீர்ப்பாசனம், மின்னாற்றல், பயிர் காப்பீடு முதலானவற்றைப் பெறுவதற்கான வாய்ப்பு வாயிலாக உழவர்களுக்கு பிழைப்புப் பாதுகாப்பை உறுதிசெய்தல்;

(ஈ) நிலத்தையும் நீரையும் உணவு உற்பத்திசெய்வதிலிருந்து தகாத முறையில் மாற்றிப்பயன்படுத்துவதைத் தடைசெய்தல்;

(2) கொள்முதல், சேகரிப்பு, மற்றும் எடுத்துச் செல்வது தொடர்பான தலையீடுகள்–

(அ) பருவெட்டான தானியங்களைக் கொள்முதல் செய்தல் உள்ளடங்கலாக பரவலான கொள்முதலை ஊக்குவித்தல்;

(ஆ) கொள்முதல் செயல்பாடுகளின் நிலவியல் மாறுபாடு;

(இ) போதுமான பரவலாக்கப்பட்ட தற்கால மற்றும் அறிவியல் சேகரிப்பு வசதியை அதிகரித்தல்;

(ஈ) உணவு தானியங்கள் மிகுதியாகவுள்ள வட்டாரங்களிலிருந்து நுகர்வு வட்டாரங்களுக்கு உணவு தானியங்களை எடுத்துச்செல்வதை இயல்விக்கும் பொருட்டு இருப்பூர்தியங்களின் பாதை அளவினை விரிவாக்குதல் உள்ளடங்கலாக, உணவு தானியங்கள் இடம் பெயர்வதற்கு மற்றும் இந்த நோக்கத்திற்காக போதுமான எண்ணிக்கையிலான வண்டிகளை ஏற்படுத்துவதற்கும் முதலில் முன்னுரிமை அளித்தல்.

(3) மற்றவைகள்—

(அ) பாதுகாப்பான மற்றும் போதுமான குடிநீர் மற்றும் துப்புரவு ஆகியவற்றை பெறுவதற்கான வாய்ப்பு;

(ஆ) உடல் நலப் பொறுப்புணர்வுக்கு வாய்ப்பு;

(c) nutritional, health and education support to adolescent girls;

(d) adequate pensions for senior citizens, persons with disability and single women.

(இ) வளர் இளம்பருவ சிறுமிகளுக்கு சத்துணவு, உடல்நலம் மற்றும் கல்வி ஆதரவுக்கு வாய்ப்பு;

(ஈ) மூத்தக் குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் மற்றும் மணமாகாத பெண்கள் ஆகியோருக்குப் போதுமான ஓய்வூதியங்களுக்கான வாய்ப்பு.

## SCHEDULE IV

[See section 3(1)]

## STATE-WISE ALLOCATION OF FOODGRAINS

| S.No | Name of the State | Quantity (in lakh tons) |
|---|---|---|
| 1. | Andhra Pradesh | 32.10 |
| 2. | Arunachal Pradesh | 0.89 |
| 3. | Assam | 16.95 |
| 4. | Bihar | 55.27 |
| 5. | Chhattisgarh | 12.91 |
| 6. | Delhi | 5.73 |
| 7. | Goa | 0.59 |
| 8. | Gujarat | 23.95 |
| 9. | Haryana | 7.95 |
| 10. | Himachal Pradesh | 5.08 |
| 11. | Jammu and Kashmir | 7.51 |
| 12. | Jharkhand | 16.96 |
| 13. | Karnataka | 25.56 |
| 14. | Kerala | 14.25 |
| 15. | Madhya Pradesh | 34.68 |
| 16. | Maharashtra | 45.02 |
| 17. | Manipur | 1.51 |
| 18. | Meghalaya | 1.76 |
| 19. | Mizoram | 0.66 |
| 20. | Nagaland | 1.38 |
| 21. | Odisha | 21.09 |
| 22. | Punjab | 8.70 |
| 23. | Rajasthan | 27.92 |

## இணைப்புப்பட்டியல் IV

[**3(1)** ஆம் பிரிவைக் காண்க]

### மாநிலங்கள் வாரியான உணவு தானியப் பங்கீடு

| வ.எண். | மாநிலத்தின் பெயர் | அளவு (இலட்சம் டன்னில்) |
|---|---|---|
| 1. | ஆந்திரப் பிரதேசம் | 32.10 |
| 2. | அருணாச்சலப் பிரதேசம் | 0.89 |
| 3. | அசாம் | 16.95 |
| 4. | பீகார் | 55.27 |
| 5. | சட்டீஸ்கர் | 12.91 |
| 6. | தில்லி | 5.73 |
| 7. | கோவா | 0.59 |
| 8. | குஜராத் | 23.95 |
| 9. | அரியானா | 7.95 |
| 10. | இமாச்சலப் பிரதேசம் | 5.08 |
| 11. | ஜம்மு–காஷ்மீர் | 7.51 |
| 12. | ஜார்கண்ட் | 16.96 |
| 13. | கர்நாடகம் | 25.56 |
| 14. | கேரளம் | 14.25 |
| 15. | மத்தியப்பிரதேசம் | 34.68 |
| 16. | மஹாராஷ்டிரம் | 45.02 |
| 17. | மணிப்பூர் | 1.51 |
| 18. | மேகலாயா | 1.76 |
| 19. | மிசோரம் | 0.66 |
| 20. | நாகாலாந்து | 1.38 |
| 21. | ஒடிசா | 21.09 |
| 22. | பஞ்சாப் | 8.70 |
| 23. | ராஜஸ்தான் | 27.92 |

| | | |
|---|---|---|
| 24. | Sikkim | 0.44 |
| 25. | Tamilnadu | 36.78 |
| 26. | Tripura | 2.71 |
| 27. | Uttar Pradesh | 96.15 |
| 28. | Uttarakhand | 5.03 |
| 29. | West Bengal | 38.49 |
| 30. | Andaman and Nicobar Islands | 0.16 |
| 31. | Chandigarh | 0.31 |
| 32. | Dadra and Nagar Haveli | 0.15 |
| 33. | Daman and Diu | 0.07 |
| 34. | Lakshadweep | 0.05 |
| 35. | Pudducherry | 0.50 |
| | Total | 549.26 |

-----

| | | |
|---|---|---|
| 24. | சிக்கிம் | 0.44 |
| 25. | தமிழ்நாடு | 36.78 |
| 26. | திரிபுரா | 2.71 |
| 27. | உத்திரப்பிரதேசம் | 96.15 |
| 28. | உத்தரகாண்ட் | 5.03 |
| 29. | மேற்கு வங்காளம் | 38.49 |
| 30. | அந்தமான் நிக்கோபார்த் தீவுகள் | 0.16 |
| 31. | சண்டிகர் | 0.31 |
| 32. | தாத்ரா நாகர் ஹவேலி | 0.15 |
| 33. | டாமன் மற்றும் டையூ | 0.07 |
| 34. | இலட்சத் தீவுகள் | 0.05 |
| 35. | புதுச்சேரி | 0.50 |
| | மொத்தம் | 549.26 |

-----